ரந்தகர்த்தா
ரசுரகர்த்தா } வை. மு. கோதை நாயகி அம்மாள்.

3-JUL

# JEGAN MOHINI

# ஜெகன் மோகினி.

மலர் III 1926 இதழ் 6.

JL
0211,N22Jm
N26 3·6.
182829

ன் மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
வல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொருமாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகைவெளியாகும்·

# கிறிஸ்மஸ் புது வருட பண்டிகைகளில்

## பரிசளிக்கத் தகுந்த சாமான்

இச்சஞ்சிகை சந்தாதார்களுக்குமட்டும் இக்குறைந்த விலை.

கடியாரங்களின் விலைகள் குறைக்கப்பட் டிருக்கின்றன.

முந்துங்கள் ! முந்துங்கள் !! முந்துங்கள் !!!

**எல்லா கடிகாரங்களுக்கும் 5 வருஷம் உத்திரவாதம்**

**22 காரட்டு ரோல்டுகோல்டு கை கடியாரங்கள்**

பட்டு பட்டையுடன் நன்றாய் உழைக்கக்கூடியது.



NO. 505, Rs. 10.



NO. 507, Rs. 12.



NO. 518, Rs. 10.



NO. 511, Rs. 11.



NO. 517, Rs. 13.



NO. 510, Rs. 13.

நேர்த்தியான வேலைப்பாடுள்ளது

சரியான காலத்தை காட்டக்கூடியது.

**உடனே எழுதுங்கள்**

ஒவ்வோர் கடியாரத்துடனும் ஓர் உயர்ந்த பவுண்டன் பேனா

இனாமாக அனுப்பப்படும்.

விலாசம் :— **பீட்டர் வாட்ச் கம்பேனி,**

**போஸ்ட் பாக்ஸ் நெ. 27,**

**மதராஸ்.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - JUL 1926
MADRAS

## 7-வது அதிகாரம்.

போக்கைக்கிழத்தின் கோக்கரிப்பு.

**நா**ன்காவது அதிகாரத்தின் இறுதியில், வீணைப்பெட்டியோடு கூனற் கிழவியைத் தூக்கிக்கொண்டு, ஜெமீந்தாரின் பங்களாவில் நுழைந்தார்கள் என்பதோடு நிறுத்திவிட்டோ மல்லவா? பிறகு, கூனியின்கதி யாதாயதென்பதைக் கவனிப்போம். தேனும்பேட்டையில், லோகாற்புதம் ஜெமீந்தாரிடத்தில், துபாஷ் சாரங்கபாணி முதலியார், வைதேகியைப்பற்றி வெகுவாய்ப் புகழ்ந்து, அவளைவிட அதிக அழகுவாய்ந்த பெண்மணி இந்த ஈரேழுபதினுன்கு புவனங்களிலும் தேடினாலும் கிடைக்கமாட்டாளென்று கூறி, "அத்தகைய அபரஞ்சித் தங்கமாகிய கொஞ்சும் மொழி அஞ்சுகத்தை அடையும் படியான சிலாக்கியத்தைப்பெற்ற உமது பாக்யமே பாக்யம்! எல்லாம் உமது யோக்யதைக்குத் தகுந்தபடிதான் ஈசன் சேர்த்து வைப்பான். அடாடாடா! என்னவென்று சொல்வேன்? போங்கள். அவளழகை தாங்கள் நேரில் கண்டாலன்றி, என்னால் எடுத்துரைக்கவே முடியாது. ஏன்? ஆயிரம் நாவையுடைய ஆதிசேஷனாலும் அது முடியாதென்றால், வேறு அத்தாக்ஷியும் வேண்டுமா? இன்னும் பத்துமணி சாவகாசம் தாங்கள் மெத்த பொறுமையோடு இருந்தால், நீங்கள் அந்த உத்தமியின் புருஷனாய் விடுவீர்கள். அப்புறம் தெரியாதா சாரங்கபாணி சொல்லியது உண்மைதான் என்பது. தெரிந்துவிட்டால், போதும்." என்று பலவாறு தூபதீபங்களை யெல்லாம் தன் வாயாகிய உடுக்கையால் அடித்து, வெகு பக்தி சிரத்தையோடு கூறினான். அதை எல்லாம் கேட்ட கிழவருக்கு ஏற்கெனவே உள்ளுக்குள் வேலைசெய்து கொண்டிருந்த ஆசை என்னும் இயந்திரம் இவனுடைய வர்ணனையாகிய எண்ணெயைப் போட்டமாத்திரத்தில் வெகு பரபரப்பாய் வெளிக்கிளம்பி, மோகம் தலைக்கேறும் வண்ணம் சுற்றவாரம்பித்தது. சாரங்கபாணி முதலியின் வார்த்தையில் ஈடுபட்டு, மதிமயங்கி, உணர்வு கலங்கி, தாம் அப்போதே வைதேகியைக் கண்டுவிட்டது போலவும்,

அதனால் உண்டாகும் ஆனந்தவெள்ளத்தை அள்ளிப் பருகுபவர்போலவும், தமது வாயில் இருந்த பல்களுக்கெல்லாம் செலவு கொடுத்து அனுப்பிவிட்டு, வழவழப்பான தோலினால் செய்த மனிபர்ஸ் போலவிருந்த வாயைத் தானாகவே பிளந்துகொண்டு அதன் வழியால் தனது சந்தோஷத்தைக் காட்டுவதுபோல நாக்கை நீட்டி, மடக்கி, கடகடவென்று அடங்காநகைப்பையும் ஆநந்தத்தையும்காட்டிய கிழவர் அந்த சமயம் அவர் தமது மனதிலிருந்த பேரானந்த அற்புதவெள்ளத்தில் தாம் என்ன சொல்கிறோம், என்ன செய்கிறோம் என்பதைக்கூட மறந்தவராய், துபாஷ் முதலியாரை நோக்கி, ஒரே தாவலாய்த்தாவி, "என் கண்ணாட்டி! ஆ என் பெண்டாட்டி! என்னருகில் வராமல் தூர ஏன் உட்கார்ந்திருக்கிறாய்?" என்று சொல்லிக்கொண்டே கெட்டியாய்ப் பிடித்துக்கொண்ட சமயம், துபாஷ் முதலியார் பார்த்து, "இதென்ன விபரீதமாயிருக்கிறதே! என்னையே கட்டியணைக்க வருகிறாரே" என்று எண்ணி, ஜெமீந்தாரின் கையை மெல்லப்பிடித்து தூரவிலக்கிவிட்டு, "என்ன ப்ரபுவே! மறந்து செய்துவிட்டீர்களா! நான் வைதேகியல்லவே. சாரங்கபாணியாயிற்றே! தெரியவில்லையா? இன்னும் 10-மணி நேரம்தான் பொறுக்க வேண்டுமென்று சொன்னேனே. அதை மறந்து விட்டீர்களா?" என்று, வெகு வணக்கத்தோடு கூழைக் கும்பிடு போட்டுகொண்டே கூறினான்.

அப்போதே தம் உணர்வைப் பெற்ற ஜெமீந்தார் விழித்துக்கொண்டு, "அடடா! என்ன காரியம் செய்துவிட்டோம். சீச்சீ! "காமத்திற்குக் கண்ணில்லை" என்பதை நான் இப்போதுதான் அறிந்தேன்" என்று தலைகுனிந்து, வெட்கத்தால், என்ன பதில் சொல்வதென்பதை யறியாமல் சற்றுநேரம் நின்று, பிறகு ஒருவாறு தம்மைத் தேற்றிக்கொண்டு, "நாம் வெட்கப்பட்டு பதில் பேசாமலிருந்தால், இவன் நம்மைக் கேவலமாய் மதிப்பான். அதற்கு நாம் இடம்தரக் கூடா"தென்று எண்ணி, "என்ன முதலியாரே! நான் என்ன பைத்தியம் என்று எண்ணினீரா? அப்படி நீர் முதலியார் என்பதை யறியாமல் நான் உம்மைக் கட்டிக்கொண்டதாக எண்ண வேண்டாம். நான் காரணம் உரைப்பதற்குள் நீர் அவசரப்பட்டுச் சொல்லிவிட்டீர். எனக்கென்ன, நீர் வைதேகி என்று நினைக்க மூளைக்கலக்கமா? நேற்று

142824

முழுதும் நீர் வைதேகியைப்பற்றியும், அவள் பயப்படுவதாயும் அவள் மஹாபதிவ்ருதை என்றும், இன்னும் பல கூறவில்லையா? அதைக் கேட்டபிறகு நான் யோசித்து என்னடா அவள் ஒருகால் வராம லிருந்து விடுவாளோ என்ற பயத்தால் நான் அவளை என்னுயிராக பாவித்து, இப்படித்தான் எப்பொழுதும் தப்பாமல் மனமொப்பி இருப் பேன் என்பதை உம்மிடம் செய்துகாட்டி இதை அப்படியே அவ ளிடம்போய் உரைத்து அவளைத்தேற்றும் என்று சொல்வதற்காக உம்மைக்கட்டித் தழுவினேனேயன்றி, நான் பித்துப்பிடித்துச் செய்ய வில்லை. இன்னும் 10-மணி சாவகாசம் பொறுக்க என்னாலாகாதா என்ன? அப்படி நீர் எண்ணவேண்டாம்.'' என்று வெகு அழுத்தமும் திருத்தமுமாய், "குப்புறவிழுந்தவன் மீசையில் மண்படவில்லை" என்பதுபோலக் கூறினர்.

அதைக்கேட்ட துபாஷ் முதலியார், மனதிற்குள் ஜமீந்தார் செய் தது மோகாவேசத்தால் என்பதை நன்கறிவானாலும், அதைவெளிப் படுத்திக் காட்டிக்கொண்டால், தனக்குச் சேரவேண்டிய பணம் சரி யாய் வருமோ வராதோ வென்ற பயத்தினல் ஜமீந்தார் சொன்னதை உண்மை என்று ஆமோதித்தவன்போல் அபிநயித்து, பல்லிளித்து, "ஓகோ! அப்படியா சங்கதி! ஆனல் மெத்த சந்தோஷம்! இதை இப்படியே போய் அவ்விடத்தில் உங்கள் பத்தினியாகிய வைதேகி யம்மாளிடத்தில் கூறிவிடுகிறேன். எனக்கு நேரமாகிறது. உத்தரவு வாங்கிக்கொள்கிறேன். நான் போய், என் சாப்பாடு முதலியவைகளை முடித்துக்கொண்டு, நேரே ஆலங்காத்தா பிள்ளை தெருவுக்குப்போய், ராத்திரி உங்கள் பத்தினியை அழைத்துக்கொண்டு வரவேண்டிய ஏற் பாடுகளைச் செய்யவேண்டும். உத்தரவா?" என்று இழுத்து இழுத் துக் கூறினன்.

அதைக்கேட்ட ஜமீன் கிழம் வெகு சந்தோஷத்தோடு, "சரி. இந்த நோட்டைக் கொண்டுபோய் அவள் பாட்டியிடம் கொடுத்து விட்டு, வேலையை அழகாய் நடத்திவிடும். உம்முடைய தொகையை இரவு கொடுத்து விடுகிறேன். சரிதானே?" என்றார்.

துபாஷ்முதலியார், வெகு தந்திரமெல்லாம் செய்து தான் வைதே கியை அவரிடம் கொண்டு வந்துவிட்டு, தன் பணத்தை இரட்டைப்

பங்காய் வாங்கவேண்டும் என்ற எண்ணத்தை மனதில் பூர்ணமாய் வைத்திருந்தானாதலால், ஜெமீந்தாரிடத்தில் அந்தச்சாயலைக் காட்டிக் கொள்ளாமல் வெகு முடுக்காய் "என்ன ப்ரபுவே! தாங்கள் அப்படிக் கேட்கிறீர்கள்? எனக்கு அந்தப்பணமா ப்ரதானம்? தங்கள் இஷ்டத் தைப் பூர்த்திசெய்து வைப்பதொன்றுதான் எனக்குப்ரதானமேயன்றி பணம் எனக்கு ஒருபொருட்டல்ல. நான் பணத்தையே எதிர்பார்த்து வேலை செய்பவனல்ல. உங்களைப்போலொத்த பெரிய மனிதரின் சினேகமொன்று இருந்தால் அதுவே போதும். பணம் எங்கே ஓடிப் போகின்றது." என்று வெகு கம்பிரமாய்ச் சொல்லிக்கொண்டே எழுந்தான்.

அதைக் கேட்ட கிழவர் "என்ன முதலியாரே! நீர் ஒருத் தரைப்போல அற்பமனிதரல்ல வென்பது எனக்குத் தெரியாதா? உங்கள் பெருந்தன்மை என்ன! குணவிசேஷமென்ன! பரோப காரச் சிந்தையென்ன! அவைகளை எல்லாம் நான் அறியாதவ னன்று. வெறுமை வேடிக்கை யார்த்தமாய்க் கேட்டேன். இதோ இந்த நோட்டு கிழவியுடையது. இது உம்முடையது." என்று சொல்லிக் கொண்டே, ஓர் ஆயிர ரூபாய் நோட்டையும், 500 ரூபாய் நோட்டையும் துபாஷிடம் கொடுத்துவிட்டு, "இதை இப் பொழுது வைத்துக்கொள்ளும். இதோ என் விரலில் இருக்கும், இந்த மோதிரமும் உம்முடையதுதான். இதை இரவு கொடுக்கிறேன். சரிதானா? சரி. துபாஷ் முதலியாரே! போய், சபாஷ் முதலியாராக வாரும். இரவு 8 மணியை எட்டிப் பார்த்துக்கொண்டே இருக்கி றேன். சீக்கிரம் வேலையை முடித்துக்கொண்டு வாரும்." என்று கூறி முதலியாரை காலை 10-மணிக்கு அனுப்பிவிட்டு பிறகு கிழவர் தமது வேலைகளை முடித்துக்கொண்டு வைதேகியின் வரவை வெகு ஆவ லோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

மணியும் முறையே சென்று மாலையை யடையும் சமயமாயிற்று. கிழவர் தம்மைக் காணும்போதே வைதேகி மயங்கி விழுந்துவிட வேண்டுமென்ற ஆசையோடு தம்மை ஓர் அரசன்போல வெகுவாய் அலங்கரித்துக்கொண்டு முன்னும் பின்னும் தமது அழகை அரை நிமிஷத்திற்கொரு முறை பார்த்தவண்ணமாய், எல்லா அலங்காரமும்

சரியாய் அமைந்திருக்கிறதா அல்லது எதையாவது விட்டுவிட்டோமா என்ற எண்ணத்தோடு தமது படுக்கையறையில் ஓராள் உயரம் பதிக்கப்பெற்றிருந்த நிலைக்கண்ணாடி பீரோவண்டை சென்று, நன்றாய் அரைமணி நேரம் தமது அழகைக் கண்டு தாமே மயங்கியவர் போலத் திரும்பித் திரும்பிப் பார்த்து, வாயைப் பிளந்துகொண்டு "ஆஹா! ராஜா என்றால் நான்தான் ராஜா. என்னழகைக் கண்டு நானே மயங்கி விடுகிறேனே, அந்தத் தேவடியாக்குட்டி என்னைக் கண்டால் விடுவாளா? விடவே மாட்டாள். என்னைப் பார்க்கும் போது ஒரே குதியாய் குதித்துத் தாவிவந்து என்னைக் கட்டி யணைய மாட்டாளா? இதற்கெல்லாம் காரணம் என்னுடைய இயற்கை யழகு பாதி; செயற்கை யழகு பாதியல்லவா? என்னுடைய வைரக் கடுக்கன் தகத்தகாயமாய் மின்னுவதைப் பார்த்தால், யாதொரு இடுக்கணுமின்றி அவள் ஓடி வரவேண்டியதுதான் தடை. எல்லாவற்றிலும் சிறந்து காட்டும் எனது தலைக்குட்டையும், மூக்குக் கண்ணாடியும், தகதகவென்று மின்னும் கடியார சங்கிலியும், கைவிரலில் ஜ்வலிக்கும் கமலமோதிரமும், தங்க சரிகையே மயமாய் மின்னும் உருமாலையும் ஒன்றுகூடி என்ன சிறப்பாய் எடுத்துக்காட்டுகின்றன! இவ்வளவு அழகையும் கண்டபிறகு அவள் பிடிவாதமெல்லாம் கொடியில் பறந்து போய் விடாதா" என்று பலவாறாய் எண்ணமிட்டுக்கொண்டு, வைதேகியால் தமக்கு ஏற்படப்போகும் ஆநந்தத்தை எண்ணி எண்ணி நிலைக்கடங்கா மனவெழுச்சியோடு அலைகடல் போன்று கொந்தளித்த மனத்தினராய் அந்தியின் வரவை வெகு முந்தியாகவே எதிர்நோக்கிச் சிந்தையில் சொல்லறியா விதமான சந்தோஷத்தோடு தம்மை அதிவிந்தையாய் அலங்கரித்துக்கொண்டு, கந்த பரிமளங்கள் பூசிக்கொண்டு, சந்தனப் பொட்டணிந்து, தம்மைவிட ரூபசுந்தரன் இந்த புவனமெங்கும் தேடினாலும் கிடைக்கமாட்டான், "நாமே கந்தர்வனுக்கு ஒப்பான அழகு வாய்ந்தவன் என்பதில் ஐயமே இல்லை. நாம் வைதேகியை மயங்கச்செய்வது திண்ணம்." என்று பலவாறாய்க் காமாந்தகாரமாய் எண்ணமிட்டுக்கொண்டு அந்தக் கோமளாங்கியின் வரவை அதி ஆவலோடு எதிர்நோக்கியவாறு மணியைப் பார்த்தவண்ணமாய் கம்பீரமாய் உலாவிக்கொண்டிருந்தார்.

மணியும் 7 அடித்துவிட்டது. கிழவருக்கு மோகம் தலைக்கேறி விட்டது. நிமிஷம் ஏற ஏற கிழவர் மனதில் இருந்த ஆசை யெல்லாம் ஒருங்குகூடி ஏற வாரம்பித்துவிட்டது. "இன்னும் 1 மணி காலம்தான் இருக்கிறது. அந்தத் தெள்ளமிழ்த கலசத்தை துபாஷ் நமக்குக் கொள்ளை யடித்துக்கொண்டு வந்து சேர்க்கப்போகிறார். அந்த ஆநந்த வெள்ளத்தை நாம் துள்ளித் துள்ளிக் குதித்தவாறு அள்ளி அள்ளிப்பருகி, அந்தப் புள்ளிமானின் இன்பசுகத்தை யடையலாம்." என்று எண்ணி 7 மணிக்கே கள்ளனைப்போல விளக்கை யணைத்து விட்டு, மிரள மிரள விழித்துக்கொண்டு காத்திருந்தார். "வைதேகி என்ற பைங்கிளியை எப்போது காணலாம். அந்த மடமயிலை என் ஆவலடங்க எப்போது கட்டியணைத்து முத்தமிடலாம். ஐயோ! இந்தப் பாழும் கடியாரம் ஏன் இப்படி மெல்லப் போகின்றது? இப் போதே மணி 8-30 ஆவதற்கென்ன கேடு? என் கட்டிக்கரும்பை, மணம் கமழ்ந்த மல்லிகையரும்பைக் காணும் பாக்யம் இன்னும் வர வில்லையே" என்று ஏங்கிஉள்ளுக்கும் வெளிக்குமாய் உலாவிக்கொண்டே இருந்தார். மணி 8 அடித்துவிட்டது. கிழவர் பாடு விவரிக்கொணாத விதமாய் விட்டது. குட்டியிட்ட பூனைபோலத் தவித்துக்கொண்டே வீதியில் எங்காகிலும் வண்டிவரும் சத்தம் கேட்டால் உடனே சிறு குழந்தைபோல எழுந்து வீதிக்குப்போய்ப் பார்ப்பதும், அவரது வீட்டு வாசலில் நிற்காமல் வண்டி அப்புறம் ஓடி மறைவதைக் கண்ட வுடன் வெட்கத்தால் தலை குனிந்துகொண்டு திரும்பி விடுவதுமாய்த் தவித்துக்கொண்டே இருந்தார். மணி எட்டரையும் ஆய்விட்டது. என்ன செய்வார் பாவம் கிழவர்? வருஷக்கணக்கில் அவர் கிழவராய் விட்டாரேயன்றி அவர் மனதோ நிமிஷத்திற்கு நிமிஷம் பால்ய வய துடைய யுவர்களைவிட அதிகமான வேதனையை யடைந்துகொண்டே வருகிறது. மணி எட்டரை என்பதைப் பார்த்தவுடன், அவர் தேள் கொட்டியவர்போலத் துடிக்கவாரம்பித்தார். அவர் பாடு பெரும் கேடாயிற்று. தமது அலங்காரத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நின்ற கிழவர் அதையும் மறந்துவிட்டார். 'இன்னும் வைதேகி ஏன் வரவில்லை?' என்ற கேள்வியே அவர் மனதில் போரா டிக் கொண்டிருந்தது. அந்தப் பங்களாவின் முற்றத்திலிருந்த ஒரு நாற்காலியில் வந்து அவர் உட்கார்ந்தார். அப்போதே உருக்கி

வார்த்த சொர்ணக்கிண்ணம்போல ப்ரகாசிக்கும் மதிமன்னன் வெகு அழகாகவும் குளிர்ந்த பார்வையுடனும் தன் பரிவாரங்களான எண்ணற்ற நட்சத்திர சைனியங்களைத் திரட்டிக்கொண்டு புவனத்தைப் பவனி வருபவன்போல ஜிலு ஜிலுத்த காற்றாகிய தன் ஏவலாளை நாட்டுக்குள் சென்று மதிமன்னர் வருகிறார் வருகிறார் என்ற சேதியைப் பறைசாற்ற அனுப்பியதுபோல காற்றை எங்கும் மந்தமாருதமாய் வீசவிட்டு, தானும் வெகு சுந்தரமாய்த் தனது குளிர்ந்த கிரணங்களைப் பரப்பிக்கொண்டு, சந்திரராஜன் வெகு அந்தமாய்க் கிளம்பி தனது கோட்டை வாயிலாகிய கீழ்த்திசையில் வெகு கம்பீரமாய் உதித்துவிட்டான். அரசன் வரவைக்கண்டு ஜனங்கள் எதிர்கொண்டு அழைப்பதுபோல இளந்தம்பதிகளும், சிறு குழந்தைகளும், பாலியப் பருவமுடைய யுவகர்களும் வெகு சந்தோஷமாய் நிலவின் வெளிச்சத்தில் கொக்கரித்து விளையாடலானார்கள்.

எங்கும் ஒரே வெளிச்சமும் ஜில் ஜில் என்ற மந்தமாருதமுமே அரசனுடைய வரவை யாவருக்கும் தெரிவித்துக்கொண்டிருந்தன. அந்த அற்புதக்காட்சி காண்போர்மனத்தைக் கவரும் தன்மையதாயிருந்தது. ஆனால் நமது கிழவருக்கு மாத்திரம் அந்தக் காட்சி வெகு தீட்சண்யமாகவே இருந்தது. அவருக்கு அந்த சிலுசிலுத்த காற்று உடம்பில் படப்பட அது அவரை நிலையிலா வண்ணமான ஹிம்சைக்கு உட்படுத்தியதேயன்றி, சற்றும் அனுசரணையாகவில்லை. கிழவருக்கோ அந்த மதியைக் கண்ணாலும் பார்க்கப் பிடிக்கவில்லை. ஏனெனில் மதியைவிட அதிக அழகுவாய்ந்த வைதேகியை இன்னும் சற்று நேரத்தில் தாமடையவிருக்கும்போது இந்த மதியை எதற்குப் பார்ப்பது என்ற ஒரே கொள்கையைக் கெட்டியாகக் கொண்டார்.

நமது கிழவர் வைதேகி என்ற மடவன்னத்தின் மீதிலேயே தமது முழு மனத்தையும் லயிக்கவிட்டிருந்தாராகையால், அவர் அச்சமயம் ஒரு பித்தன்போலப் பிதற்றவாரம்பித்தார்.

ஆகாயத்தை உற்றுநோக்கி "ஏ மதிமன்ன! நம்மைவிட அழகு வாய்ந்தவர்கள் இப்பூமண்டலத்திலேயே இல்லை என்று

எண்ணி நீ வெகுநாளாய் கர்வமடைந்துகொண்டே இருந்தாயல்லவா? உன்னைப் படைத்த ஈசனே உன்னைத் தோல்வியடையச் செய்யத்தக்க மற்றொரு மதியை இம்மண்ணுலகத்திற் பிறப்பித்திருப்பதை நீயறியவில்லை போலும்? இதோ அடுத்த நிமிஷம் அம்மதிமுக மங்கை இங்கு வந்து என் சங்கையைப் போக்கப் போகிறாள். அப்போது நீ அவளைக்கண்டு, ஏமாற்றமடைந்து, வெட்கித் தலைகுனிந்துகொண்டு வந்த வழியைத் தேடிக்கொண்டு கம்பி நீட்டவேண்டியது தான் பாக்கி. உன் ஆணவமெல்லாம் இனி அந்த மதியின் எதிரில் செல்லாது. எல்லாவற்றையும் கட்டி தூரத்தில் மூட்டையாக வைக்கவேண்டியது தான் உன்கதி. நீ பல சிப்பந்திகள் புடைசூழ இருக்கும் சக்கரவர்த்தி என்று இறுமாப்புக்கொள்ளலாம். அந்த மதியான அதிசுந்தர ரூபலாவண்ய மடமயில் ஸ்ரீகளுக்குள்ள அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற லக்ஷணங்களைத் தனது சிப்பந்திகளாகக் கொண்டு, குணம் என்னும் மணமான மந்தமாருதம் ஊரெங்கும் வீசிப் பறைசாற்ற இதோ வரப்போகிறாள். அடுத்த நிமிஷம் வந்துவிடுவாள். அவளைக்கண்டு வெட்கி ஒளிவதைவிட இப்போதே என்னை வருத்தாமல் போய்விடு, அது அழகாயிருக்கும்" என்று பலவாறாய் சித்தப்ரமை கொண்டவர்போலப் பிதற்றிக்கொண்டேயிருக்க, வீதியில் ஒரு வண்டி வந்த ஓசையைக்கேட்டு எழுந்து துள்ளிக்குதித்து ஓடினார். அவர் போவதற்குள் அவ்வண்டி மாயமாய் மறைந்து விட்டதை எண்ணி, மனம் தவித்து, ஏமாற்றமடைந்து, திரும்பிவந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்து அடியில் வருமாறு யோசிக்கலானார்.

"என்ன ஆச்சரியம்! இன்னும் ஏன் என் கண்மணி, என் காதல் நவமணி, இன்னும் வரவில்லை? எட்டரைமணிக்குச் சரியாய் வருவதாய்ச் சொல்லிச்சென்ற ஆசாமி ஏன் காலதாமதம் செய்யவேண்டும்? அந்த முதலிப்பயல் சொல்லியவாறு நடக்கவில்லையே. மணி எட்டரை என்பது போய் 9 ஆகிவிட்டதே! அவன் ஏன் இன்னும் அவளைக் கூட்டி வரவில்லை? எட்டுமணிக்கே வருவதாகச் சொன்ன மொட்டை முதலி தடியன் ஏன் என்னை இவ்விதம் தாமதம் செய்து வருத்த வேண்டும்? ஒரு கால் நம்மிடத்தில் பணத்தைப்பறித்துக்கொண்டு நம்மை ஏமாற்றி விடுவானோ! அதற்காகவே நம்மிடம் இல்லாத பொல்லாத

பொய்களைச் சொல்லிவிட்டுப் பணத்தை அபகரித்துக்கொண்டு போய் விட்டானோ! ஒருகால் அந்தப்பெண் நிரம்பவும் பதிவ்ருதா தர்மத்தில் தேர்ந்தவள் என்றும், அவள் இத்தகைய அட்டூழியத்திற் கெல்லாம் இணங்கமாட்டாள், அவளை எப்படியாவது தந்திரம் செய்து மந்திரம் போட்டுத்தான் கொண்டுவரவேண்டும் என்றும் சொன்னானே. அவ்விதமே அந்த மங்கை இதற்குச் சம்மதிக்காமல் மறுத்துவிட்டு இவர்கள் கையிலகப்படாமல் எங்காவது சென்று விட்டாளோ அல்லது அந்தப் பயலே பணப்பேய் பிடித்து இவ்விதம் கட்டுக்கதை யொன்றை நிர்மாணித்து விட்டானோ ஒன்றும் தெரியவில்லையே. ஐயோ! என்மனம் தாமரை இலை நீர்த்துளிபோலத்தவிக்கின்றதே! என்செய்வேன்? பணத்திற்குப் பணத்தையும் கொட்டியாய்விட்டது. என் மனத்திற்குச் சந்தோஷம் ஏற்படுமோ இல்லையோ தெரியவில்லையே. எது எப்படி இருந்தாலும், தடியன் துபாஷ்பயல் எங்கேபோய் விடப்போகிறான்? அவன் சொன்ன கெடுவிற்குக் கொஞ்சநேரம் தாமதமானாலும் பாதகமில்லை. குறியாய் வந்துசேர்ந்தால் பிழைத்தான், இல்லையேல் அவனை சும்மாவிடுகிறதில்லை. அவன் குடலைப் பிடுங்கி மாலையாக மாட்டிக்கொள்ள மாட்டேனா? அவனையா பிறகு சும்மாவிடுவேன்? அவன் குடுமி என்கையிலல்லவா இருக்கிறது." என்று பலவாறாய் எண்ணமிட்டவண்ணம் இருக்கையில், வீதியில் ஒரு வண்டிவந்து நின்ற சப்தம்கேட்கவே, அவர் மட்டற்றமகிழ்ச்சியை யடைந்து, ஆநந்தத்தாண்டவம் புரிந்த வண்ணம் வீதிப்பக்கம் நோக்க, அவ்விடத்தில் இரண்டு ஆள்கள் வீணைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தது தெரியவே, கிழவர் தம்மையே தாம் மறந்து, அகமகிழ்ந்து, முகமலர்ந்து, நகைபுரிந்து, வெகு உற்சாகத்துடன், "வாருங்கள். வாருங்கள். ஏன், முதலியாரைக்காணோமே? எங்கே அவர்?" என்று நயமாயும் ஆநந்தச்சிரிப்புச் சிரித்தபடியும் கூறிக்கொண்டே தமது படுக்கையறைக்கு வழிகாட்டிக் கொண்டே முன்னால் உள்ளே சென்றார். பின்னால் இருவரும் சேர்ந்து வீணைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஜெமீந்தாரின் படுக்கையறையை யடைந்து அங்கு பெட்டியை வைத்தார்கள். கிழவர் கேட்டதற்கு உடுப்பில்லாத ஜவான் "எஜமானே! முதலியார் தம் தேகபாதை நிவர்த்திக்காக வெளியில் சென்றார். இதோ வந்துவிடுவார்." என்றான். அதைக்

கேட்ட கிழவர் வெகு மரியாதையோடு "நீயாரப்பா?" என்று வினவினர். அதற்கு சேவகன். "ஐயா! நான் முதலியாருடைய கையாளுங்க. அவர் என்னை எந்த வேலைக்கும் சகாயத்திற்கு அழைத்துக் கொள்வது வழக்கம். அதுபோலவே உங்கள் காரியத்திற்கும் என்னைக் கூப்பிட்டார். பெட்டியைத்தூக்க முடியவில்லை. என்னையும் இவனையும் சேர்த்து அனுப்பினர். அவரும் இதோ வந்து விடுவார்." என்று சொல்லிக்கொண்டே வண்டிக்காரனையும் கண்ஜாடையாய் அழைத்துக் கொண்டு மெல்ல நழுவிவிட்டான். கிழவர் அப்போதிருந்த மன நிலைமையில் தமது வண்டிக்காரனோடு பேசக்கூட மறந்து, வீணைப் பெட்டி மீதே கண்ணைவைத்துப் புதைத்திருந்தபடியால், அவர்கள் சென்றதைக்கூட கவனிக்காமல், அந்தப்பெட்டியையே பார்த்தபடி தேன் குடித்த நரிபோலப் பொக்கை வாயிலிருந்தொழுகிய நீரை நக்கி நக்கி உஸ் உஸ்ஸென்று உரிஞ்சத் தொடங்கினர்.

பிறகு அவர் திரும்பிப்பார்க்க, அந்த இருவரும் அங்கு காணப்படவில்லை. கிழவருக்கோ அப்போதிருந்த மனநிலைமையில் துபாஷ் முதலியாருக்காக சற்று இருக்கவேண்டுமே என்ற எண்ணம் வருத்தலாயிற்று. ஆயினும் கிழவர், "தடிப்பயல் இவ்வளவு நேரம் கழித்து வந்தவன் நேரே இங்கே வராமல் எங்கேயோ போய் விட்டானே! வந்த பிறகு சற்று காத்துக்கொண்டிருக்கட்டும். அதற்குள் நாம் வைதேகியை எடுத்துக் கட்டிலில் படுக்கவைப்போம்." என்று எண்ணினர். ஆனல் அது அடுத்த நிமிஷம் மாறிவிட்டது "சீ. நமக்காக எவ்வளவோ கஷ்டப்பட்டு அவன் இந்த வைரக்கல்லைக் கொண்டுவந்திருக்கிருன். அதை மதியாமல் நாம் அவசரப்படுவது அழகல்ல. பொறுத்தது பொறுத்தோம். அவன் வரும்வரையில் சற்று பொறுத்துக்கொண்டிருந்தால், அதற்குள் அவளுக்கும் மயக்கம் தெளிந்து விடும்." என்று தீர்மானித்தார்; என்றாலும், அவர் மனதெல்லாம் வீணைப்பெட்டிக் குள்ளேயே சென்று லயித்துப் போயிருந்ததாகையால், அவர் அதற்குள்ளிருந்த வஸ்துவை எப்போது நாம் காணலாம், எப்போது அந்தப் பேரானந்த வெள்ளத்தை அள்ளிப் பருகலாம்என்று யோசித்துக்கொண்டே இருக்க, அப்போதே அந்தப் பெட்டியைத் தூக்கவந்தவர்கள் எங்கே என்ற நினைவு உண்டாயிற்று. உடனே அவர் சுற்று முற்றும் பார்த்தார். எங்கும் அவர்களைக் காணவில்லை.

ஜெமீந்தாருக்கு சந்தோஷம் பொங்க, "பேஷ்! நல்ல கெட்டிக்காரர்கள் இவர்கள்! இந்த சமயம் நாம் இங்கிருக்கலாகா தென்று எண்ணி, முதலியாரை அழைத்து வருகிறதற்காகப் போய்விட்டார்கள். சரி. நல்லதாயிற்று. அவர் வருகிறபோது வரட்டும். நாம் அதற்காகக்காப் பது அனுவசியம். நம் கட்டிக்கரும்பைக் கட்டி யணையவேண்டிய முயற் சிகளைச் செய்வோம்." என்று ஒரு முடிவு செய்து கொண்டவராய், மெல்ல வீணைப்பெட்டி யருகில் சென்று பெட்டியைத்திறக்க முயன்றார். அதற்குள் கிழவருக்கு ஒன்று நினைவிற்கு வந்தது. என்ன வெனில், துபாஷ் முதலியார், அவள் நல்ல வழியாய் வந்துவிட்டால் போகிறது; இல்லையேல் அவளுக்கு மயக்க மருந்து கொடுத்துத்தான் கொண்டுவரப் போகிறேன். தாங்கள் ஜாக்ரதையாய் நடந்து கொள்ளுங்கள். விளக்கிருந்தால் அவள் மயக்கத்திற்கு சீக்கிரம் தெளிவு ஏற்படாது. ஆகையால் விளக்கை அவித்து விட்டே அவளி டம் நெருங்குங்கள் என்று சொல்லிச் சென்றிருந்ததை அப்போதே நினைத்தாராதலால், ப்ரகாசமாய் எரிந்து கொண்டிருந்த விளக்கை யணைத்து விட்டு, மறுபடி பெட்டியண்டை வந்து, பெட்டியின் மூடி யை விலக்கி விட்டார். அப்போது அவர் மனதில் உண்டான ஆனந்த மும், ஒருவித மனவெழுச்சியும், ஆத்திரமும் ஒன்று கூடி அவரை அப்படியே பரவசப்படுத்த, அவரது மோகலாகிரி உச்சநிலையை யடைந்து விட்டது. அவர் மனதில் விவரிக்க இயலாத வேதனைகளும் விகாரங்களும் வந்து கப்பிக்கொண்டன. அவர் அந்த வீணைப்பெட் டிக்குள் ஒரு பெரிய நிதியே வந்து இறங்கி விட்டதைப் போல எண்ணி சற்று குதிக்கவும் ஆரம்பித்து விட்டார். ஆனல், தாளந் தான் பாக்கி. அதற்குப் பதிலாக அவர் தமது கையையே கொட்டவா ரம்பித்து விட்டார். அறுபது வயது கிழத்தனமெல்லாம் பறந்து போக, இருபதுவயது யுவகன் மாதிரியான நிலைமையை அடைந்து விட்டார். ஐயோ! இன்னும் மயக்கம் தெளிய வில்லையே! பாவி, ஒரு வேளை போதைகலந்த ஆகாரத்தை நிறைய உள்ளுக்குள் செலுத்தி விட்டார்களோ! அதனல் இவளுக்கு இன்னும் மயக்கம் தெளியவில் லையோ! எப்போது தெளிந்து எழுந்துவந்து என் அற்புத வடிவத் தைக் கண்டு கற்பகத்தருவாகிய வைதேகி என்னைக் கட்டியணைவாள்? என் செய்வேன்?" என்று பறந்து கொண்டே இருந்தார்.

வீணைப்பெட்டியிலோ கூனற்கிழவி வெகு ஆணவமாய்ப் படுத்து, கிழவனையே அடைய வேண்டும்; கிழவனுக்கு உகந்த கிழவி யாக வேண்டும் என்று ஈசனைக்குறித்து தவம் செய்பவள்போல கண்ணைத் திறக்காமல் படுத்திருக்க, வண்டியிலிருந்து உருண்டு அடி பட்டதனுல், அவளது உடம்பில் ரத்தம் சந்தனம்போலக் கசிந்துக் கொண்டே இருக்கிறது. தலையை நீட்டியாவது இவள் அழகைப்பார்ப் போம் என்று கிழவர், பெட்டிக்குள் குனிந்து வெண்சாமரம் போன்ற மயிர் பிசாசின் தலைமயிரைப்போல அலங்கோலமாய் அவிழ்ந்து கிடக் கப்படுத்திருந்த கிழவியைப் பார்த்தார். அப்பொழுது கிழவியினு டைய வெண்சாமரம் போன்ற கூந்தல், சலவைசெய்த ஒரு வெள்ளைத் துணிபோல இருந்ததைக் கண்ட, கிழவர்" இதென்ன, வெள்ளைத் துணி தெரிகின்றதே! இது எந்தத் துணியாகவிருக்கும்? இந்த இருட் டில் வைதேகியின் தரிசனம் கிடைக்காவிட்டாலும் அவளது ரவிக்கை யானது வெள்ளைத் துணிபோவிருப்பது நன்ருய்ப் பளிச்சென்று தெரிகிறது என்று எண்ணியவாறு உற்று கவனித்துப்பார்த்தார். அப் போது கிழவியின் தரிசனம் முற்றும் சேவையாகாவிட்டாலும் அந்தப் பெட்டிக்குள் வெள்ளைத் துணிபோலத் தெரிந்தபாகம் அவள் ரவிக்கை யணியும் பாகமல்ல, தலைபாகமாக விருக்கிறது; என்றமட்டும் அவர் தெரிந்து கொண்டார். கிழவருக்கோ நிமிஷம் ஏற ஏற மனதின் வேட் கையதிகரித்துக் கொண்டே சென்றது. கிழவிக்கோ மயக்கம் தெளிகிற பாடில்லை. கிழவருக்கோ மயக்கம் தலைக்கேறி விட்டது. என்ன செய் வார் பாவம்! கிழவருக்கு அப்போதிருந்த மன நிலைமையோ அவள் மயங்கிக் கிடந்தாலும் பாதகமில்லை; அவளை மெல்லத் தூக்கி, கட்டித் தழுவி, முத்தமிட்டுக் கட்டிலில் கிடத்தி விடலாமா என்று யோசித்து கையையும் விரித்து விட்டார். பிறகு மறுபடியும் "நாமோ கிழவன். இவளோ சிறு பெண். நாம் இவளைத் தூக்க முயன்று தூக்க மாட்டா மல் கடைசியில் கைதவறி விட்டுவிட்டால், மோசமாய் முடிந்து என் ஆசை எல்லாம் நாசமாய்விடுமே? ஐயோ! அத்தகைய ஆபாசத்தைச் செய்து அவளுக்கும் காயம் உண்டாக்கிக் கடைசியில் நம் எண்ணத் தையும் ஈடேற்ருமல் ஏமாற்றம் அடைவதைவிட சற்று பொறுத்துச் செய்வதே உசிதமான வேலை. மேலும் இந்தப் பெண்மணியை, தன் கற்பைத் தனது கண்மணிகளைப் போல காத்து வரக்கூடிய நன்

மணியை, நாம் இம்சை செய்யாமல் இவளே என்வடிவத்தையும் பேரழகையும் கண்டு காதலோடு ஓடிவரும்படிச் செய்ய வேண்டுமேயன்றி அதிக ஆசைப்பட்டால் அதிக நஷ்டந்தான் சம்பவிக்கும்.'' என்று எண்ணியவராய் "தலையில் எதற்கு இவள் துணியை மூடியிருக்கிறாள்? ஒருவேளை பனி முதலியது எதுவும் படாதபடி இருப்பதற்காக இவள் ப்ளானலினால் மப்ளர் கட்டிக்கொள்ளும் வழக்கம்போல விருக்கிறது. அப்படியே இரவு காலமாகையால் அதைக் கட்டியே வைத்திருக்கிறாள் கிழவி. சரி, நல்லது. இவளுக்கு இத்தகைய வெள்ளைத்துணியில் எதற்காக மப்ளர் கட்டவேண்டும்? ஒரே தங்கசரிகை நிறைந்த பீதாம்பரத்தினால் புதிதாய் நெய்து வாங்கி நாளைக்கே கட்டி விடுகிறேன். கண்மணி வைதேகி! இந்த மட்டத்துணியை விலக்கிவிடு. நல்ல முதல் தரமானபட்டுக் குட்டையைக் கட்டிக் கொள்ளலாம். இதை நானே விலக்கி விடட்டுமா?'' என்று எண்ணினார். பிறகு "சீச்சீ. இப்போது இவள் மயங்கிக்கிடக்கும் தருவாயில் நாம் கோணமாணலாய்த்திருப்பி இதை யவிழ்த்தால் இந்தச் சமயம் இவளுக்கு மயக்கம் தெளிந்தால் நம்மை என்ன எண்ணுவாள்? "இதற்குள் இப்படி ஆத்திரமா''என்று ஒருவித அருவருப்பு அவளுடைய மனதில் தோன்றுவிதமாய் நாம் நடக்கவேண்டும். சற்று நிதானித்தால் இவள் தானே எழுந்து விடுவாள்'' என்று எண்ணி, அவளையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார். பெட்டிக்குள்ளிருந்தவள் மெல்ல அசைவது போல அவளது கைகால்கள் பெட்டியின்மேல் மோதிய ஓசையைக் கேட்ட கிழவர், மதி மயங்கி, உணர்வு கலங்கி, ஆசை என்னும் பசையில் ஒட்டிய வண்ணம் தா, தை என்று ஆநந்தத்தாண்டவம் செய்யத் தொடங்கி, "அதோ என் கண்ணிருகருமணி எழுந்திருக்கும் சமயமாயிற்று; தெளிந்துவிட்டது; அசைந்தாடுகிறாள். என்காதல் கிளியே! வைதேகி மணியே! என் மனதைக் கொள்ளைகொண்ட கோகிலமே! இன்னும் உன்மனம் இளகவில்லையா? எழுந்துவந்து என்னாசையைத் தீர்க்கமாட்டாயா? என் உயிரைப் பிழைக்க வைக்கமாட்டாயா?'' என்று வாய்பிதற்ற வாரம்பித்துவிட்டார். அப்போது அவர் நிலைமையைக் கண்டால் ஒரு உன்மத்தம் பிடித்தவர்போலும், குடிகாரர் போலும் காணப்பட்டார்.

வீணைப்பெட்டிக்குள், கோணமாணலாய்ப் படுத்திருந்த கூனற் கிழவிக்கு அப்போதுதான் மயக்கம் தெளியவாரம்பித்தது. மெல்ல

மெல்ல ஒவ்வோரங்கமாய் அசையத் தலைப்பட்டது என்றாலும், அவள் சுய உணர்வை நன்றாய்ப் பெற்றாளில்லை. ஆயினும் தான் என்னவோ கனவு காண்பவள்போலவும் தன்னை எங்கோ ஆகாயத்தில் தூக்கிக் கொண்டு செல்லும் மாதிரியாயும் ஒருவித சுற்றல் இருப்பதை அவள் நன்றாயறிந்தாள். ஆனால் வாய் திறந்து பேச முடியவில்லை. கண்ணைத் திறந்து பார்க்க முடியவில்லை. இன்னும் 5 நிமிஷத்திற்கெல்லாம் தான் கனவு காணவில்லையென்றும் நினைவோடு தான் இருப்பதாக வும் தோன்றிற்று. ஆனால் அவள் தாராளமாய் எழுந்திருக்கவும் பேசவும் அவளால் சுத்தமாய் முடியவில்லை. அவள் சற்று கையை அசைத்தால் அது தபீரென்று வீணைப்பெட்டியின்மேல் மோது கின்றது. காலை அசைத்தால் அது தடால் புடால் என்று தாளம் போடுகின்றது. அந்த நிலைமையில் அவள் தன் சுய உணர்வை அப்போதே பெற்றாள். அவள் மனதில் தான் வைதேகிக்குச் செய்ய விருந்த சதியாலோசனையே அப்போது பளிச்சென்று நினைவிற்கு வந்தது. "ஐயோ! நாம் ஆயிர ரூபாய் பணத்தையும் தம்பி யிடத்தில் வாங்கிக்கொண்டு வேலையை முடிக்காமல் இப்படி அகா லத்தில் அனுவசியமாய் மூதேவி தூக்கத்தில் நம்மை யறியாமல் சோற்றைத் தின்றதும் உறங்கிவிட்டோமே! என்ன பைத்தியக்காரக் காரியம் செய்தோம். அந்தச் சிறுக்கி ஏற்கனவே பிடிவாதம் பிடித்த வளாயிற்றே. இப்போது மணி என்ன விருக்குமோ. வழக்கப்படி அவளும் சாப்பிட்டுவிட்டுப் படுத்திருப்பாளே. அவளை இனி என்ன செய்வது. தம்பி ஒருவேளை வந்து பார்த்துவிட்டுப் போய்விட்டானோ? என்னவோ தெரியவில்லையே" என்று பல சங்கதிகளெல்லாம், அவள் மயங்கிக் கிடந்து, அதிக சிரமப்பட்டுத் தெளிந்த சமயத்தில் தோன் றியதாகையால், மூளைக்கு மறுபடியும் கிறுகிறுப்பு உண்டாய்விட்டது. அவள் மறுபடியும் ஆயாசமாய்க் கண்ணைமூடிப் படுத்துவிட்டாள். பிறகு 5 நிமிஷத்திற்கெல்லாம் மறுபடி கண் திறந்து பார்த்தாள். அப்போ தும் கண் போதையின் வேதனையால் ஒரே எரிச்சலாய் இருந்தாலு லும் அவள் மனதில் இருந்த ஓர் ஆவேசத்தால் கண்ணை மெல்லத் திறந்துகொண்டு பார்த்தாள். எங்கும் ஒரே இருளாய் இருக்கக் கண்டு, "ஐயோ! நடுநிசியாயிருக்குமோ! விளக்கே காணப்படவில் லையே. எப்படியும் தினம் விளக்கில்லாமல் படுத்துக்கொள்வதே

வழக்கமில்லையே. இன்றுமட்டும் ஏன் அது அணைந்து போய்விட்டது?" என்று யோசித்துக்கொண்டே எழுந்திருக்க முயன்றாள். அவள் வண்டியோடு பள்ளத்தில் விழுந்து அடிபட்ட காயங்களெல்லாம்வலி எடுப்பதை அவள் அப்போதே உணர்ந்து "ஐயோ! இதென்ன நம் உடம்பு ரணமாய் வலிக்கின்றதே! இப்படி வலிக்கும்படியாய் காயம் எதுவும் படவில்லையே. ஒருவேளை இடுக்கு முடுக்கான இடத்தில் படுத்துவிட்டோமா. காலிலும் கையிலும் ஏதோ தட்டுப்படுகின்றது. அந்த இக்கட்டினுல்தான் உடம்பெல்லாம் வலிக்கின்றதா, ஒன்றும் தெரியவில்லையே. நாம் எந்த இடத்தில் படுத்திருக்கின்றோம் என்பதும் தெரியவில்லையே. நாம் தினம் படுக்கும் கயிற்றுக் கட்டிலில் தானே படுத்தோம். அதுவும் நினைவில்லையே. எந்த இடத்தில் ராத்ரி படுத்தோம். அப்படி வேறு இடத்தில் படுத்திருந்தாலும் இவ்வளவு இடுக்கான இடத்தில் எப்படி படுத்திருப்பேன்? முதலில் இவ்வித இடுக்கான இடம் நம் வீட்டில் எங்கிருக்கிறது?............ஒருவேளை நடையில் மெத்தைப்படியின் கீழே சின்ன திண்ணை இருக்கிறதே, அந்தத் திண்ணையில் உட்கார்ந்து அப்படியே தூங்கிவிட்டோமா? ஒன்றும் தெரியவில்லையே. எந்த இடத்தில் தேகம் பட்டாலும் வலியும், ஏதோ சுவர்போலவும் தட்டுகின்றதே. அது என்ன வாயிருக்கும்?" என்று பலவாருய் யோசித்து யோசித்துப் பார்த்தும், அவளுக்கு எதுவும் நன்ருய்ப் புலப்படவில்லை. அவள் மனமோ துருமெயிலுக்கு மேல் பறக்கிறது. எப்படியாவது எழுந்து மேலே யாகவேண்டிய காரியத்தைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் அவளை வருத்தலாயிற்று. அவள் மெல்ல தான் அந்த இடுக்கான இடத்தைவிட்டு எழுந்து வெளியில் வந்துவிட்டால் பாதி காரியம் ஆய்விட்ட மாதிரிதான் என்ற எண்ணத்தால் அவளால் ஆனவரையில் தட்டித் திணரி, முட்டிமோதி கஷ்டப்பட்டு எழுந்திருக்க என்ன பிரயாசைப்பட்டாலும் வலியின் பாதையாலும் பெட்டியின் இடுக்குபாதையாலும் அவள் சற்றும் வெளிப்பட முடியவே இல்லை. என்ன செய்வாள் பாவம்! அப்புறம் இப்புறம் திரும்பினுல் உடம்பு வலியோடு தடால் புடால் என்று மோதுவது அவளுக்கு மரணவஸ்தையாய் இருந்தது. அவள் கடைசியில் தன்னுல் தனியாய் ஒருவருடைய சகாயம் இல்லாமல் எழுந்திருக்கமுடியாது என்ற எண்ணம் அவள் மனதில் உண்டாய்விட்டது.

உடனே கிழவியின் மனதில் துக்கமும், வெட்கமும், ஆத்திரமும் வைதேகியின்மேல் கடுஞ்சினமும், பெருங்கோபமும், நரசிம்மாவதாரம் போல உண்டாய்விட்டது. அப்போது அவளுக்கிருந்த நிலைமையில் சற்று எழுந்திருக்க வழி மாத்திரம் கிடைத்திருந்தால் அவள் வைதேகி யைக் கிழித்து கட்டாயம் மாலையாகப் போட்டுக்கொள்வது திண் ணம். அவ்வளவு வீரத்தனத்தில் கோரமாய்ப் படுத்திருந்தாள். அவள் அன்று மாலையில் வைதேகியுடன் சம்பாஷித்து தோல்வியடைந்த வர்மத்தை அவள் பூர்ணமாய் மனதில் வைத்திருந்தபடியால் அவ ளுக்குண்டான கோபமுற்றும் வைதேகியின் மீதே பாய்ந்துவிட்டது. "தடிச்சிறுக்கி! அவள் நம்மை மாலையில் அவமானப் படுத்தியது போதாதென்ற எண்ணத்தோடு நாம் படுத்திருந்த சமயம் நம்மைத் தூக்கி இந்த இடுக்குமுடக்கான இடத்தில் தள்ளிவிட்டாளோ? இல்லையேல், இந்த நிர்ப்பந்தமான இடத்தில் நாமே வந்து ஒருநாளும் படுத்திருக்க மாட்டோமே. அவள் நம்மேல் உள்ள கோபத்தால் இப் படிச் செய்திருக்கிறாள் என்பதில் சந்தேகமே இல்லை. இந்த இடத்தி லிருந்தோ என்னால் தனியாய் எழுந்திருக்க முடியவில்லை. அந்த சதி காரச் சிறுக்கியைக் கொண்டா நான் எழுந்திருப்பேன். அவள் உத வியை நான் மறுபடி நாடினால் அவளுக்கு என்னிடம் எவ்விதமான எண்ணம் உண்டாகும்? ஐயோ! இந்த தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வேன்! நாம் இன்னும் எத்தனை நாழி படுத்திருந்தாலும் கால ஹரணமாகிறதேயன்றி நம்மால் தனியாய் எழுந்திருக்க முடியவில் லையே! என்ன செய்வேன்! உம்; அந்த சித்திராங்கியின் உதவியைக் கொண்டே நான் எழுந்து பிறகு அவள் கண்ணில் ஊசியைவிட்டு ஆட்டுகிறேன். அந்த சாமர்த்யம் என்னிடம் இல்லை என்று எண்ண அவளால் முடியுமா? ஆகட்டும். நான் முன்னால் வெளிக்கிளம்பி பிறகு ஆகவேண்டியதைக் கவனிக்கின்றேன். அந்த வித்தைக்கள்ளி என்னை விட்டு எங்கே போகப்போகிறாள்? அவள் உயிர் என் கையிலல்லவா இருக்கிறது. ஒரு கை பார்த்துக்கொள்ளுகிறேன். இந்த சமயம் அவளை நிரம்பவும் பக்ஷமாய் நடத்துபவள்போல நடந்துகொண்டு அவள் கையைப் பிடித்து எழுந்த உடனே அவளிடம் நான் கோபமா யிருப்பதைக் காட்டாமலேயே காரியத்தில் காட்டிவிடவேண்டும்." என்று ஒருவித முடிவிற்கு வந்தவளாய் மெல்ல தன் பொக்கை

வாயைத் திறந்து வழவழா கொழ கொழா என்று "அடியே மகளே! மகளே! என்று இருமுறை கூவினள்.

அதுவரையில் பெட்டியையே உற்று நோக்கிக்கொண்டிருந்த கிழவர் பெட்டிக்குள் அசைவதையும் அவள் மெல்லத் தெளிந்து எழுந்திருப்பதையும் பார்த்துக்கொண்டே "இவள் எப்போது நன்றாய்த் தெளிந்து வாய் திறக்கப்போகிறாள்" என்று காத்துக்கொண்டிருந்தார். கிழவி வாயிலிருந்து என்ன சொல் வந்ததென்பதையும் கவனியாமல் அப்போது மனதில் இருந்த மோகமானது அதை எல்லாம் மறைத்து தன் ஆசையொன்றையே மூர்க்கமாய் முன்காட்டி நின்றதாகையால், அவள் வாயில் வந்த சொல்லேயும் கிழக்குரலேயும் அவர் கவனியாமல் அந்த வாயிலிருந்து ஏதோ சப்தம்கிளம்பியதொன்றையே உணர்ந்து, அந்தக் குரலாகிய அம்ருத தாரையைக் கண்டு ஆநந்தமே வடிவாய் தலேகால் தெரியாமல் குதித்துக்கொண்டே "இவளுக்கு தெளிந்துவிட்டது. இனி நாம் தேவேந்திர போகம் அடையலாம்" என்ற ஒரே எண்ணத்தைக் கொண்டவராய்க் கிழவி வாய் திறந்து பேசியதிலிருந்து அவளுக்கு நன்றாய்த் தெளிந்து விட்ட தென்றதை நன்றாயறிந்தார். அவளேத் தானே மெல்லத்தூக்கி விடவேண்டும் என்று ஆவலே வடிவாய் இருந்தார். ஆதலால் அவர் உடனே பரம சந்தோஷத்தோடு தம்மையே மறந்தவராய் அவள் வாயிலிருந்து இன்னும் என்ன வருகிறதென்றதைச் சற்றுக் கவனித்தார்.

கிழவி தான் தன் மகளே யழைத்ததற்கு யாதொரு மறுமொழியும் கிடைக்காமையாலும் வீடும் ஊரும் நிச்சப்தமாயிருந்தபடியாலும் அவள் நன்றாய்த் தூங்கி விட்டாளோ என்ற கவலேயோடு, அவள் இன்னும் உரத்த குரலால் "என்கண்ணே! கண்ணே! எழுந்து வாயேன்." என்று கூவினள். அவள் கூச்சலிட்டாலும் பொக்கை வாய் வழுவழுப்போடு மயக்கத்தின் சேஷ்டை இன்னும் நன்றாய்த் தெளியாதபடியாலும் தான் கூவியது அவள் மனத்திற்குக் கூச்சலிடுவது போலத் தோன்றியதானுலும் பிறருக்கு அது மிகவும் மெல்லப் பேசுவதுபோல விருந்தது.

அவள் கூவியதில் கிழவரின் காதுக்கு "கண்ணே கண்ணே." என்ற இரண்டு பதம் மட்டும் தண்ணீர் தண்ணீர் என்று கேட்டது.

அவ்வளவு தான் கிழவர்பாடு சொல்ல இயலாவிதமாய் ஆய்விட்டது. அவர் தத்திக்குதித்து, தாண்டவம் செய்து பெட்டிக்குள் கையை விட்டுக்கொண்டே "என் கட்டிக்கரும்பே! எழுந்திரு; இதோ கூஜா நிறைய பாலும் காப்பியும் தயாராக விருக்கிறது. உனக்கு வேணு மான வரையில் சாப்பிடலாம்" என்று சொல்லிக்கொண்டே கையை விட்டுக் கிழவியைத் தூக்க முயன்ற சமயம் கிழவர் சொல்லிய வார்த் தைகளில், கிழவி காதில் "கட்டிக்கரும்பே" என்றபதம் "பாட்டி இருங் கோ" என்று கேட்டவுடன் அவள், தான் வெளிக்கிளம்பத் தருணம் வந்து விட்டதென்ற சந்தோஷத்திலிருக்கையில் கிழவர் தன்னைத் தூக்க கையை விட்டதும் அது அவள் தேகத்தில் பட்டவுடன், அவள் தேகவலியில் கைபடவே, இன்னும் வலி எடுத்து ஜாஸ்தியாய் விட்ட படியால், கிழவர் சொன்ன மீதிவார்த்தை அவள் காதில் விழவில்லை. கிழவர் கையை உள்ளே விட்டு கிழவியின் பக்கபாகத்தைத் தடவி அதைக்கண்டு பிடித்துமெல்லத் தூக்கினர். கிழவியும் தன் பலத் தோடு எழுந்திருந்தாள். பெட்டிக்கு வெளியில் எடுத்த உடனே கிழவி தான் வைதேகியிடம் நிரம்பவும் பக்ஷமாய் இருப்பவள் போல நடிக்க வேண்டும் என்று தான் முன்னுலேயே ஏற்பாடு செய் திருந்த படியால், வெளியில் எழுந்த நிமிஷமே, கிழவி கிழவரை வைதேகி என்று எண்ணி, சரேலென்று ஆவலோடு இருகையாலும் இறுகத்தழுவிக் கட்டியணைத்து தன் வாய்க்கு நேரே இருந்த எந்த இடத்திலோ முத்த மிட்டாள். அதே சமயம் கிழவர் ஏற்கெனவே எண்ணெயில் விழுந்த அப்பம்போலக் குதித்துக் கொண்டு பொக்கை வாயைப் பிளந்து பிளந்து கொக்கரித்துக் கொண்டிருந்தாராதலால், அவளை எப்போது வெளியில் எடுத்துக் கட்டியணைக்கப் போகிறோம் என்ற ஆத்திரத்தினுல் வெளியில் எடுத்த உடனே தம்மை மறந்து ஆனந்தபூரித மடைந்து ஆவல் தீரக்கட்டியணைத்து முத்து மாரி யைப் பொழிந்து விட்டார். இருவரும் முத்து மழை சொரிந்து விட்டார்கள்.

கிழவி கிழவரை வைதேகி என்று கட்டியணைந்தவுடன் அவள் கைக்கு கிழவரின் சரிகை நிறைந்த உருமாலை தட்டுப்பட்டது. பின் னும் தடவிப்பார்க்க நல்ல முதல் தரமான கோட்டுத் துணி வேறுமா

திரியாய்த் தட்டுப்பட்டதை உணர்ந்தவுடன்தான் கிழவி மனதில் சற்று சந்தேகம் தோன்றலாயிற்று. அவள் பலவாறு எண்ணலானாள்.

“என்னடா இது! வைதேஹி இன்று சரிகை புடவையே கட்டிக்கொள்ளாமல் சாதாரணப் புடவைதானே கட்டியிருந்தாள்! இப்போது சரிகை துணிபோலவும் இன்னும் வேறுவிதமான துணி போலவும் தட்டுகின்றதே. ஒருகால் இப்போது வேறு புடவை கட்டிக் கொண்டாளோ! என்ன ஆச்சரியம்! நாம் பன்னிப் பன்னிச் சொன்னாலும் கட்டிக்கொள்ளாத மனுஷி இப்போது இரவில் சரிகை புடவை எதற்குக்கட்டி இருப்பாள்? அவள் இன்று தலைகூட வாரிக்கொள்ளவில்லையே. தலைவாராமலா புடவை கட்டியிருப்பாள். தலைப் பின்னல் போட்டிருக்கிறாளா பார்ப்போம்” என்று ஓர் இமைப்பொழுதில் இதையெல்லாம் எண்ணி தன்கையால் கிழவரின் தலையைத் தடவினாள். நல்ல சரிகைத்தலை குட்டைத் தென்பட்டதை நோக்கியவுடன் கிழவிபாடு இடி இடித்த மாதிரியாய் விட்டது. அப்போதே கிழவி தான் கட்டியணைந்தது ஓர் ஆண் பிள்ளையை என்பதை உணர்ந்தாள். அவ்வளவுதான், அவள் கிழவன் கட்டிவிருந்து திமிர முயன்ற சமயம் கிழவரே அவளை விட்டுவிட தபீர் என்று வெட்டிச்சாய்ந்த மரம் போல அவள் விழுந்து விட்டாள்.

கிழவர் கிழவியைத் தூக்கி நிற்கவைத்த தருணமும் தான் எதிர்பாரா விதமாய் அதற்கு முன் தான் தன்னழகைக்கண்டு அவளே நம்மைக் கட்டியணைந்து கொள்ள ஓடிவரமாட்டாளா என்ற எண்ணத்தைப் பூர்ணமாய் எண்ணியிருந்தவராதலால் தாம் எண்ணியவாறே அவள் முன்னால் பாய்ந்து தம்மைக் கட்டியணைத்து முத்தமிட்டதைக்கண்ட கிழவர் ஆத்திரம் தாங்காமல் வைதேகி என்று கிழவியை தம் ஆவலடங்க இறுகத்தழுவி, மார்போடணைத்து, கன்னத்தில் இரண்டொரு முத்தம் இட்டவுடன் கிழவர் மனதிற்கு ஒரு வெறுப்பும், கிழவியின் கன்னம் சுருங்கி இருக்கிறதென்ற உணர்ச்சியும் தோன்றின. வண்டியிலிருந்து விழுந்த காயத்தின் ரத்தக்கசிவும், நரைத்த தலைமயிரின் துர்க்கந்த வாடையும், சரேலென்று கிழவர் மூக்கில் பட்டவுடன் கிழவர் அருவருப்படைந்தார். வெண்சாமரம் போல

இருந்த அவளது தலைமயிரை, அவர் மப்ளர் என்று நினைத்திருந்தாராதலால், அவர் அதை விலக்கப் போகையில், அது அவளுடைய தலைமயிர் என்பதையும் உணர்ந்தார். உடனே கிழவருக்கு இன்னதென்று சொல்ல இயலாமலிருந்த மோக ஆவேசமெல்லாம் அந்த ஆபாசங்களையும், கிழவியின் கூன் முதுகையும் காணப்பறந்து போய் விட்டன. கிழவர் தபீரென்று கிழவியை அப்பால் தள்ளிவிட்டார். அதே சமயம் கிழவியும் திமிர விருந்தாளாகையால் அவள் திமிராமல் சுலபமாய் தானே விழுந்துவிட்டாள்.

உடனே கிழவர் ஆங்காரத்தோடு மின்சார விளக்கை ஏற்ற பொத்தானை அழுத்த, உடனே அந்தஉள்ளெல்லாம் நல்ல பளிச்சென்ற ப்ரகாசம் உண்டாய்விட்டது. விளக்கு வெளிச்சத்தில் கிழவி கீழே விழுந்திருந்த அலங்கோலத்தைக் கிழவர் கண்டதுதான் தாமதம், வந்துவிட்டது கோபம்; ரௌத்ரா காரமாய்க் கண் சிவக்க, உதடு துடிக்க, தேகம் படபடக்க, மீசை விறைக்க, வயிறு எரிய,வாய் வசவு சொரிய, கோபம் நெருப்புத் தணலைப்போல வெகு தீக்ஷண்யமாய் வந்துவிட்டது. அவ்வளவு நேரம் கிழவியை வைதேகி என்று நினைத்து இருந்த குதூகலத்தில் துபாஷ் முதலியார் வரவில்லை என்பதை அறவேமறந்து இருந்ததெல்லாம் வட்டியும் முதலுமாய் அவன்பேரில் அப்போது உண்டான க்ஷாத்திரத்தை இவ்வளவென்று நாம், அளவிட்டு வரைவதே அசாத்யம். அதை யூகித்தறிவதே உசிதம்.

அத்தகைய நிலைமையில் கிழவர், அப்போதே சாரங்கபாணி வராததின் காரணத்தைத் தெரிந்து கொண்டார். எப்படியென்றால், "வைதேகியைக் கொண்டு வாராமல் கிழவியை அனுப்பி நம்மை மோசம்செய்து விட்டதற்காக, மோசக்காரன் ஒளிந்துகொண்டு வாராமலிருந்தான். உம். இருக்கட்டும். அவன் எங்கே போகிறான். அவனை நசுக்கி விடுகிறேன். இதோ இப்போதே ஆளை யனுப்பி அவனைத்தேடி இழுத்துக் கொண்டு வரச்செய்கிறேன்". என்று பல வாறாய் எண்ணியவராய், "அடேய் வண்டிக்காரா! வண்டிக்காரா!" என்று கூறியவாறு உள்ளிருந்து வெளிகிளம்பும் சமயம் தபதப வென்று நால்வர் நடந்துவரும் காலடிச்சப்தம் கேட்டது. கிழவர் அதைக் கவனிப்பதற்குள் நான்கு போலீஸ் சேவகர்களும், நமது

சார்ஜெண்டு லொள்ளுதுரையும் தடதடவென்று, அந்த உள்ளுக்குக் கிட்டவந்து விட்டார்கள். அவர்களைக்கண்டு கிழவர் நடுங்கி விட்டார். இன்னசெய்வதென்று தெரியாமல் அவர் விழிக்குந்தருணம், லொள்ளு துரை மற்றொருவனைக் கண்டு, "ஏ ஐயா! இந்த வீடுதானா?" என்றான். அதைக்கேட்ட உடுப்பில்லாத சேவகன், நிரம்பவும் பயந்து நடுங்கின வன்போல நடித்து கூழைக் கும்பிடுபோட்டு, கையை சலாம் குலாம் என்று அபிநயித்து, "ஆமாங்க எசமானே.! இந்த ஊட்டுவாசல்லே தான் வண்டி நின்னுதுங்க." என்று சொல்லிக்கொண்டே அவன் உள்ளுக்குள் விழுந்திருக்கும் கிழவியை உற்றுநோக்கி ஆரவாரம் செய்து கொண்டு, "அதோ! அதோ! கிழவியைக் கொன்றுவிட்டான். இவள் தான் எங்கபக்கத்தூட்டு கிழவி. இவளுடைய பேத்திதான் அந்த வைதேகி என்றவள். அந்தப் பொண்ணுமேலே ஆசைப்பட்டுதான் இந்த கிழவன் இந்தக் கிழவியை கொன்னுப்பூட்டான். அவளெ சொலபமாய் தூக்கிக்கினு பூடலாம்னுட்டு, ராத்திரி 8-மணிக்கு மேலே வந்து அவளை வீணைப்பெட்டிலெபோட்டு வண்டியெ உட்டுட்டாங்க நான்னு, அங்கயே உங்களோட சொல்லணும்முண்ணு பார்த்தேன். அப்புறம் இது எந்த ஊட்டுக்குப் போரதுண்ணு, அதெ பாத்திக்கினு சொல்லலாமுண்ணு சும்மா வண்டி கூடவே வந்தேன். இந்த ஊட்டு வாசல்லெ வண்டி நின்னதும், ஓடிவந்து, உங்களை இட்டாந்தேன். நேத்திக்கே இந்த ஆளு, ஒரு ஆளை அனுப்பி இந்தக் கிழவியோடு என்னமோ கேக்க சொன்னாப்பலெ இருக்குது. அவ என்னமோ மாட்டேன்னு சொன்னாப்பலே இருக்குது. இது எனக்கு நல்லா காது கேக்கல்லெ. எங்க ஊட்டுக்கும் இவங்க ஊட்டுக்கும் ஒரேஜன்னல்; அந்த ஜன்னலாலெ இதை எல்லாம் பாத்திக்கிட்டெ இருந்தேன். அதனாலே விவரம் தெரிஞ்சுது. அதுக்காவ இவளெ கொன்னுபூட்டா அப்பரம் அவ சுகமாய் ஆப்டுடுவாண்ணு செஞ்சுட்டாரு சாமி. இந்த வண்டிலெ இன்னொரு ஆளு, நேத்தி கெழவியோடெ பேசிய ஆளுகூட வந்தாரு. அப்பரம், ஊட்டாண்டெ வரச்செ எங்கேயோ எறங்கிப்போனாரு. அவருகாணோம். இந்த ஐயாதான், அந்த லோகாபூதம் ஜமீந்தாரு" என்று விடவிடவென்று மூச்சுவிடாமல் கூறினான்.

அந்த வரலாற்றை எல்லாம் கவனிப்பாய்க் கேட்கிறவர்போல நடித்த லொள்ளுதுரை "அடேய், நம்கீ சாக்ஷி என்னமோ ஒள்ட்

ஹாக், இருக்கிறு. அதேநம்கி போரும். ஏ! மூணாத்தி முப்பீதுண்ணு! அந்த ஓலக பூதம் ஜெமீந்தாருக்கு மரியாதை பண்ணு" என்றுர்.

அதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கிழவர் இன்னதென்று விவரிக்க இயலாத வண்ணமாய் விழிக்கிறுர். அதற்குள் இருவர் விலங்கை கிழவர் கைக்குமாட்டி விட்டார்கள். என்னவென்று பதில் கேட்கக்கூட நாவெழாமல் ஒரே திக்ப்ரமை கொண்டு கல்லாய் இருந்திவிட்டார். உடனே லொள்ளுதுரை ஜெமீந்தாரை நடத்திச் செல்ல உத்தரவிட்டு, வீதியில் தயாராயிருந்த வண்டியில், கூனற் கிழவியைத் தூக்கிப் போட்டுக்கொண்டு நடந்தார்கள். ஏற்கனவே காசிப் பட்டிருந்த கூனற்கிழவி கீழேவிழுந்த அதிர்ச்சியால் அப்படியே மூர்ச்சித்தவள் வண்டியில் பிணம்போலவே போய்க்கொண்டிருக்கிறுள். ஜெமீந்தார் தமது கொக்கரிப்பெல்லாம் சிக்குமுக்கலாய் விட்டதை எண்ணி, மறுமொழிகூறத் திகைத்த வண்ணம் கைவிலங்கோடு, கண்ணீர் சொரிய, தாம் எவ்விதமும் பதில் சொல்வதற்கிடமில்லாமல் எதிரிகள் கூறியதைக் கேட்டதால் உண்டான சித்தக்கலத்துடன் சென்றுர்.

---

## 8 - வது அதிகாரம்.

### வஞ்சகன் கைப்பட்ட அஞ்சுகம்.

துபாஷ் சாரங்கபாணி முதலியாரை விலங்கிட்டு அழைத்துச் சென்ற நமது லொள்ளு துரையும் சேவகர்களும், வீணைப்பெட்டியை ஜெமீந்தார் வீட்டில் வைத்துவிட்டு வந்த வேலைக்காரனையும் அழைத்துக்கொண்டு தேனும்பேட்டையில் ஜெமீந்தார் வீட்டிற்குக் கொஞ்ச தூரத்திலிருந்த ஒரு விடுதியை யடைந்தார்கள்.

போலீஸாருக்குத்தான் ஒரு விஷயம் அகப்பட்டு விட்டால் போதுமே. அதோடு அதில் சம்பந்தப்பட் டிருக்கும் ஆசாமி பிழைப்பது பகீரத ப்ரயத்தனம் தான். அதற்கும் அந்த ஆசாமி இந்த போலீஸ் தெய்வத்திற்கு வெள்ளி பில்லை புஷ்பங்களால் அர்ச்சனை செய்து, தன் பெட்டியைக் காலியாக்கிக் கொண்டால் போலீஸார் அவனை அடைத்து வைத்திருந்த சிறையைக் காலிசெய்வதே அரிதான பாடு. அவர்கள் முறைமை அப்படி இருக்க, நமது லொள்ளுதுரை

யோ சாரங்கபாணி முதலியாரை நேரில் கையும் மெய்யுமாய்ப் பிடித்து விட்டாரே, இனி சாரங்கபாணி முதலியாருக்குப் பூர்ணமாய் சனியன் பிடித்துவிட்டதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சாரங்கபாணி முதலியார் உண்மையை உரைத்துக்கூட அவரை லொள்ளுதுரை விடாமல் நன்றாய் தன்கால் ஜோடால் ஜோடித்து, காப்புகொலுசு போட்டு அழைத்து வந்துவிட்டாரே. இன்னும் உண்மையை உரைக்காதவர் பாடு என்னவாகுமோ தெரியாது.

சாரங்கபாணி முதலியார் பாடோ இன்னது செய்வதென்று தெரியாமல் திக்குமுக்கலாய் விட்டது. தான் "இந்தப் பொல்லாத லொள்ளு துரையிடமின்று எவ்விதம் தப்புவது? என்னமாய் நாம் கிழவருக்கு எதிரில் நிற்பது? வைதேஹியைக் கொண்டு வருவதாகச் சொல்லி 1500 ரூபாயையும் ரொக்கமாக வாங்கிக்கொண்டு 8 மணிக்கு திட்டமாய் வருவதாய்ச் சொல்லிவிட்டு வந்த நமக்கு இக்கதி எல்லாமா கிடைக்கவேண்டும்? இதுவும் போதாதென்று பெட்டியிலும் வைதேஹியில்லாமல் கூனற்கிழவி வந்துகிடக்கும் அதிசயம் தான் எனக்கு நினைக்க நினைக்க ஆறவில்லை. அவளே இந்த ஏற்பாடெல்லாம் செய்துவிட்டு, தானே எப்படி பெட்டிக்குள் படுத்திருப்பாள்! இதில் அவளையும் நம்மையு மறியாமலேயே ஏதோ மோசம் நடந்திருக்கிறதென்பதில் ஐயமே இல்லை. அந்தப் பெண் வைதேஹியே, இவ்வித சூதுகள்செய்து தன்னை ஏமாற்றவிருந்த கிழவியைத் தானே ஏமாற்றிவிட்டாளோ! அல்லது போலீசாரே சூதுசெய்து நம்மை இவ்விதம் சித்திரவதை செய்வதற்கென்று, நாமும் கிழவியும் செய்யவிருந்த மோசத்தைக் கண்டு, அதற்காக எங்களைத் தண்டிக்கும்பொருட்டே வைதேஹிக்குத் துணையாகவும், எங்களுக்கு எமனாகவும் வேலை செய்துவிட்டார்களோ. ஐயோ! இந்தப் போலீஸ் புலியின் இம்சையைத் தாங்கமாட்டாமல் என்னுயிர் பாதி நீங்கிவிட்டதே. இங்குத் தனியாயும் கொண்டுவந்து விட்டானே. இன்னும் என்னென்ன பாடு படுத்தப்போகிறானோ தெரியவில்லையே. என்ன செய்வேன்? ஒருகால் ஜெமீந்தாரும் நம்மேல் கோபம் கொண்டு வைதேஹிக்குப் பதிலாக கூனியை வைத்தனுப்பிவிட்டான் என்ற ஆத்திரத்தினால் நம்மேல் கேஸ் கொண்டுவந்து விடுவாரோ? ஐயோ! என்ன செய்வேன்? இந்தக்கஷ்ட காலத்தில் இப்படியா வந்து மாட்டிக்கொள்ள வைத்தார் ஈசன்" என்று தன் மனதிற்குள்ளேயே

எண்ணி எண்ணி மனம் புண்ணுகத் தவித்துக்கொண் டிருந்தார். லொள்ளுதுரையால் தமக்குக்கிடைத்த பாதரக்ஷை ப்ரஸாதத்தின் சுகம் ஒருபுறம் அவர் உயிரை வதைத்துக் குடித்துக்கொண்டே இருந்தது. அவர் உடம்பு முழுவதும் தழும்பு தழும்பாய் எழும்பிவிட்டது. அந்தத் தழும்பெல்லாம் அவர் மேனியில் எப்படி இருந்ததென்றுல் அவர் அத்தனை நாளாய் எத்தனை பெரிய மனிதர் வீட்டுப் பணப்பெட்டியைக் காலிசெய்தாரோ, எத்தனைப் பெண்களின் கற்பைக் கெடுத்து அந்தப் புண்ணியமான புனித மூட்டையைச் சம்பாதித்துக் கொண்டாரோ, எத்தனை யுவாக்கள் கல்யாணமானவர்களைத் தம் பெண்டாட்டியுடன் வாழவிடாமல் அந்த உத்தமியின் வயிறெரியச்செய்து அவளைக் கொலைசெய்யும் தருவாயில் கொண்டுவந்து விட்டாரோ அந்த அபரிமிதமான காரியங்களைச் செய்ததற்காக எல்லோரும் சேர்ந்து அந்தக்காரியம் செய்த நன்றியை எந்நாளும் மறவாமல் இருக்கும்பொருட்டு நிறைய மெடல்கள் செய்து அவர் கால்முதல் தலைவரையில் போட்டு அவரை அலங்கார புருஷனுக்கி வைத்திருப்பது போலவும், அந்த மெடல்களின் கனத்தையும் அவற்றை அணிந்த பெருமையையும் தாங்காமல் முதலியார் நெளிந்து நெளிந்து ஆடிய காட்சி மேல் குறித்த மாதிரியாக இருந்தது.

அந்த அற்புத சிங்காரத்தை அவர் எத்தனை பெரிய மனிதரிடமிருந்து பெறவேண்டுமோ, அவைகளை நமது லொள்ளுதுரை அவர்களுக்காக தானே முன் நின்று முதலியாருக்கு நன்ருய் அலங்கரித்து விட்டார். அத்தனை மனிதர்கள் செய்யவேண்டிய மரியாதையை அவர் ஒருவராகவே செய்துவிட்டபடியால் அத்தனை பெயர் மேலும் வைக்க வேண்டிய பயபக்தி விசுவாசம் எல்லாவற்றையும் முதலியார் இவர் மேலேயே சம்பூர்ணமாய் வைத்துவிட்டார். பிறருடைய நலனை வேண்டி தாம் அவ்வளவு பெரிய மரியாதைகளை எல்லாம் செய்துவிட்டாரே, அத்தகைய புண்ணியவானிடம் அவர் போகிற வழியே போகாவிட்டால் இன்னும் வெகு வெகு மரியாதையெல்லாம் செய்து உடம்பில் கல்லிழைத்துவிடுவார் என்ற பயம் அவர் மனதில் வேரூன்றி விட்டதாகையாலும், முன்ஞல் செய்த மரியாதையையே தாங்கமாட்டாமல் தவிப்பதையும் எண்ண எண்ண அவர் மனதில் சொல்லரிய பீதியும் கிலியும் குடிகொண்டு விட்டன. அவர் ஒரே தீர்மானமாய்

தன் மனத்தில் "அந்தத் துரையிடத்தில் அவர்போகிறவழியே நாமும் போகாவிட்டால் நாம் அவர் கையாலேயே இறப்பது திண்ணம். இனி ஓர் உதை கூட நம்மால் தாங்கமுடியாது. நம்முடைய உடம்பிலுள்ள எலும்பெல்லாம் நொறுங்கிவிட்டன. இன்னும் அடித்தால் அவைகள் வெளிக்கிளம்பிவிடுவது நிச்சயம். ஆகையால் நாம் மிஞ்சும்பொருட்டு அவன் போகிற வழியே சென்று அடிபடாமலும், சிறையில் செல்லாமலும் தப்பித்துக்கொண்டால் இனி இவ்வித பேரத்திற்கே வாராமல் கண் காணாத ஊருக்கு ஓடிப்போய்விடலாம். இனி ஒரு நிமிஷம் கூட இங்கே இருக்கக்கூடாது" என்று பலவாறாய் எண்ணமிட்டுக் கொண்டு தாம் புதிதாய் அணிந்த கையின் காப்பு கொலுசின் அழகையும், தம் தேகத்தில்காய்த்துத்தொங்கும் மெடல்களின் அழகையும் கண்டு, கண்டு அவர் ஹிருதயம்வெடித்துவிடும் ஸ்திதியில்கண்கள் ஆனந்தநீர்பெருக்குவதுபோல தாரை தாரையாக நீரை வழியவிட, மணக்கோலம் செய்த மணமகன்போலத் தலையைக் குனிந்துகொண்டே பூமாதேவியை நோக்கி, "அம்மா! நான் உன் வயிற்றிலேயே பிறந்து, நீ இருப்பதை மறந்து உன் மேலேயே நின்று, உன்னெதிரிலேயே இவ்வித அட்டூழியங்களெல்லாம் செய்ததற்குப் பலன்போதும்; இனி நான் இவ்விதமான வேலையில் இறங்குகின்றதே இல்லை; இது சத்தியம்; என்னை இத்தருணம் நீ யல்லாது வேறு காத்தருளும் கர்த்தா எனக்கு உண்டோ? நீதான் என்னைக்காக்க வேண்டும். இன்னும் சற்றுநேரம் போனால் இந்தப் போலீஸ் புலி என்னை என்ன செய்துவிடுவானோ தெரியவில்லையே! என்னருமைத் தாயே! நான் உலகத்தில் எத்தனையோ பெயர்களுக்கு இத்தகைய காரியங்கள் செய்திருக்கிறேன். அப்போதெல்லாம் என்னைக் காப்பாற்றினாயே. இப்போது மாத்திரம் உன்னுடைய திருநாமத்தைக் கொண்ட அந்த உத்தமியான வைதேஹிக்கு நான் செய்யவிருந்த கொடுமையை மாத்திரம் நீ தாங்காமல் என்னை இவ்விதம் புத்திவரும்படி செய்ததற்கு நான் சந்தோஷமே படுகிறேன். உன்னுடைய மகளாகிய வைதேஹிக்கு ஒருவித இழிவு வருவதைத் தாளாமல் நீ இப்படிச் செய்தாயா? என் தாயே! என்னை எவ்விதமாகிலும் இந்தத் துரையிடமிருந்து தப்ப வைத்துவிட்டால் நான் இனி தலை காட்டாமல் ஓடிவிடுகிறேன். அவ்வளவு க்ருபை நீ செய்து தான் தீர வேண்டும். நான் உன் மகனல்லவா? நீ என்னரும் தாயல்லவா?"



182824

என்று கெஞ்சிக் கேட்பவர்போல பரிதாபகரமாய் பூமியை நோக்கிய வாறே மனதில் சொல்லரிய பயமும் வேதனையும் கப்பியவராய் நின்று கொண் டிருந்தார்.

அதற்குள் லொள்ளுதுரை தம் ஜவான்களோடு என்னவோ பேசிவிட்டு, முதலியாரை நோக்கி, வெகு முடுக்காய் தம் மீசையை முறுக்கிக்கொண்டு கோபம் வழிந்த பார்வையோடு பார்த்த வண்ணம், "ஓய் டாப்பர் மாமா! என்ன யோசிக்கரே? ட்யாம் ப்ளடி ஜெமீந்தா ருக்கு டர்ட்டி பெலோ கிளவியை அனுப்பிச்சுட்டும்னு யோசிக்றயா. பேஷ்; வெரிவெல்; வெரிவெல். ஓய்! அதெல்லாம் இருக்கட்டும். இப் போது நீ நெஜத்தைச் சொல்லப்போறியா அல்லது உண்ணம் ஒன்கி சாப்பாடு ஒணுமா சொல்லு" என்று கேட்டு விழிப்பதைப் பார்த் தே முதலியார் பாடு கர்ப்பம் கலங்கிவிட்டது. 'எப்படியாவது தாம் மேலும் அடிபடாமல் இவ்வளவோடு உயிர் தப்பினால் போதும்' என்று எண்ணியிருந்த முதலியார் பரிதாபகரமான பார்வையும், இறைஞ்சிய குரலுமாய், "எஜமானே! தர்மதுரைகளே! நான்தான் அப்போதே நிஜத்தைக் கூறிவிட்டேனே. வேறு விசேஷம் எனக்கு ஒன்றும் தெரியாது. அந்தத் தேவடியாள் சிறுக்கி தான் இவ்விதம் கிழவியைப் பெட்டியில் போட்டு அனுப்பிவிட்டுத் தான் தப்பித்துக் கொண்டாள் போல விருக்கிறது. துரைகளே! சத்தியமாய் எனக்கு இதற்குமேல் ஒன்றும் தெரியாது. உள்ளதை உள்ளபடி உரைத்துவிட் டேன். வீணாய் என்னையடித்து வருத்தவேண்டாம், ப்ரபுவே! இனி என்னை ஓர் அடி அடித்தாலுங்கூட என் உயிர் போய்விடும். எஜ மானே! என் உயிரைக்காக்க வேண்டியது தங்கள் கடமை என்று விட்டுவிட்டேன். நீங்கள் எப்படி என்னை என்ன சொல்லச் சொன் னாலும் சொல்வதற்கு ரெடியாயிருக்கிறேன். என்னை மாத்திரம் அடிக்காதிர்கள். ரொம்ப புண்ணியமுண்டு உங்களுக்கு. அந்தக் கிழவி செய்திருந்த ஏற்பாட்டின்படி நான் செய்தேனேயன்றி, அந்தப் பெட்டிக்குள் கிழவியிருக்கிறாள் என்பதை நான் அறிந் திருந்தால், அவளை நான் எடுத்துக்கொண்டு வருவேனா? அங் கேயே அந்தச் சூதை பறிந்துகொண்டு அந்தத் தேவடியாள் சிறுக்கியை நான் வெறுமைவிட்டு வந்திருப்பேனா? அதை யறியாமல் தான் நான் இவ்விதம் வேதனையில் வந்து மாட்டிக்கொண்டேன்.

துரைகளே! என்னை நீங்கள் அடிக்காமல் என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன்" என்று பல்லைக் காட்டிக் காட்டி முதலியார் வெகு பரிதாபகரமாய்க் கூறினர். அதைக் கேட்ட லொள்ளுதுரை "ஓய்! உம்முடைய லெக்சர் எல்லாம் போரும் நிறுத்தும். ஆனால் இந்தக் கேஸில் உம்மேலே குத்றமில்லை என்று நீ சொல்றையா?" என்று அதட்டிக் கேட்டார்.

சாரங்க:—ஐயா துரைகளே! கிழவி விஷயமாய்ச் செய்ததெல்லாம் என்னுடைய தப்பே இல்லை. அதெல்லாம் எனக்குத் தெரியாமலேயே நடந்திருக்கிறது. அதைச் செய்தவள் அந்த வைதேகியாய்த்தான் இருக்கவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். நான் பண்ணின ஏற்பாடெல்லாம் அந்தப் பெண்ணை நல்ல இடத்தில் சேர்த்துவைக்க வேணுமென்று அந்தக் கிழவி சொல்லியவண்ணம் நான் செய்தேனே யன்றி, கிழவியை இவ்விதம் கொண்டு வந்தது நானல்ல. எஜமானே! உண்மையைக் கூறிவிட்டேன்.

லொள்ளுதுரை:—அப்டீன்ன இந்த டாம் ப்ளடி கிழவியைக் கொல்ல எண்ணிய குத்தம் அந்தப் பொண்ணுமேலல்லா சேர வேணும்?

சாரங்க:—ஆமாம் துரைகளே. அவள் தன்னை இஷ்டம்போல விடுவதில்லை என்ற குறையினால் 'கிழவியைத் தொலைத்து விட்டால் நாம் தன்னிஷ்டம்போல விருக்கலாம்' என்று எண்ணியே அவள் இப்படிச் செய்திருக்க வேண்டும்.

லொள்:—"ஓய்! அப்டீனு, இப்போ அவளைப்போய் நாங்கள் அரெஸ்ட்டு பண்ணப்போகிறோம். அதற்கு சாக்ஷியாக நீ வந்து சொல்லவேண்டும். தெரிந்ததா? அந்த மாதிரி சொல்லாவிட்டால், ஒன் உடம்புலே இருக்கும் இலும்புகூட மிஞ்சாது. அந்த இடியட் வைதேகியை அரெஸ்ட்டு பண்ணிவிடுகிறேன். நீ இப்போ வாயெ தொறக்காமே என்னோடெ கூடவந்து எப்படி சொல்லணும்னு நீ இவக்கிட்டெ வீணை வாங்கினப் போலேயும், வீணைக்குப் பதிலாய் கிளவியை அடித்து உதைத்துக் கொலைசெய்து பெட்டியில் போட்டு அனுப்பிவிட்ட மாதிரியும், அதெ நீ பாக்காமெ நம்பகத்தின்மேலே எடுத்துக்கினு வந்திட்ட மாதிரியும் கூறவேணும். பாக்கி பேச்சு வாயைத் திறந்தால் உன்

மண்டையெ ரெண்டு பண்ணிப்புடுவேன் தெரிந்ததா?" என்று சிம்மம் கர்ஜிப்பதுபோல கர்ஜித்தார்.

அதைக் கேட்ட முதலியார் தன்னை எவ்விதமாவது விட்டால் போதும் என்று எண்ணியிருந்தாராதலாலும் அந்த வைதேகி தங்களது சம்பாஷணையை மறைந்து ஒட்டுக் கேட்டிருந்து தன்னை ஏமாற்றி இவ்வித துன்பத்திற்கு ஆளாக்கிவிட்டதை எண்ண எண்ண அவருக்கு அவள்மேல் ஒருவித எரிச்சலும் கோபமும் பொங்கி எழுந்து கொண்டிருந்த தருணத்தில் லொள்ளுதுரை கூறியதைக் கேட்க முதலியாருக்கு அது உசிதமாகவே தோன்றிற்று. "தனக்கு இரண்டு கண்ணும் அவிந்தாலும் பாதகமில்லை. அண்டை வீட்டுக்காரனுக்கு ஒரு கண்ணுகிலும் அவிந்தால் போதும்" என்கிறபடி, தாம் குற்றம் செய்து ஜெயிலுக்குப் போனாலும் போகிறோம். வைதேகியும் எவ்வித குற்றமாகிலும் செய்தாளென்று மெய்ப்பித்து அவளையும் தம் கதிக்கு ஆளாக்கிவிட்டால் போதும். அப்போதுதான் தம் ஆத்திரம் அடங்கும் என்று எண்ணியிருந்த முதலியார் "சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல" வைதேகி விஷயமாய் லொள்ளுதுரை சொல்லியதை வெகு உற்சாகத்தோடு ஆமோதித்து, "ஆ எஜமானே! நான் இனி நீங்கள் சொல்வதைத் தட்டுவேனு? என்னுயிர் உங்கள் கையில் இருக்கிறதல்லவா. தாங்கள் சொல்கிறபடியே நான் நடக்கச் சித்தமாயிருக்கிறேன். மேலும் அந்தச் சிறுக்கி எங்களை வஞ்சித்ததற்கு அவளுக்குத் தாங்கள் செய்யவிருக்கும் தண்டனைவெகு நன்ருயிருக்கிறது. அப்படியே செய்யுங்கள். உங்களிஷ்டம்போல நான் செய்கிறேன். ஆனல் தயவுசெய்து என்னை மாத்திரம் மன்னிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னைச் சிறையில் வைப்பதால் உங்களுக்கு என்ன லாபம்? நான் எப்படியாவது உங்களிஷ்டப்படி எல்லாம் சொல்லுகிறேன். என் கையில் கிடைத்த ஏதோ ஆயிரம் ரூபாயும் தருகிறேன். நிஜக்குற்றவாளி என்னவோ அந்தப் பெண்தான். அவளை உங்கள் வசம் பிடித்துத் தந்த பிறகு என்னை விடுவது உங்களுக்கு ஒரு கஷ்டமல்லவே. அதற்காக உங்களை மிகவும் வேண்டுகிறேன்." என்று கூழைக்கும்பிடு போட்டுக்கொண்டே கூறினன்.

அதைக் கேட்ட லொள்ளுதுரை வெகு முடுக்காய் "ஓய் உமக்கு மறுபடியும் பசி எடுத்துக் கொண்டதோ. இந்த லெக்சரெல்லாம்

செய்யவாணும்முண்ணு நான் அப்பவே சொல்லலையா? கல்தே! சும்மா சும்மா நீ பேசினு செத்தே. நான் சொல்றபடிக்கேட்டா பொழச்செ. இல்லாப்பூட்டா உன் இலும்பு கூட ஆப்டாது ஜாக்ரதை." என்று அதட்டியவாறு இரண்டு ஜவான்களை யழைத்து அவரிடம் காவல் வைத்துவிட்டு இன்னுமுள்ள மூவரையும் அழைத்துக்கொண்டு நேரே லோகாற்புதம் ஜெமீந்தார் வீட்டையடைந்து, முன்னதிகாரத்தில் குறித்தபடி பொக்கைக்கிழவர் மேல் குற்றத்தைச்சாட்டி, அவரை யழைத்துக்கொண்டு போய்க் கூனற்கிழவியையும் அவரையும் சாரங்கபாணி முதலியாருக்குத் தெரியாத மற்றோர் விடுதியில் விட்டுவிட்டு, அங்குக் காவல்வைத்துக் கதவைப் பூட்டிக்கொண்டு முதலியாரிடம் வந்து ஏற்கெனவே தெருவில் தயாராய் நின்று கொண்டிருந்த ஒரு குதிரை வண்டியில் இன்னும் ஒரு கானிஷ்டேபிலையும் முதலியாரையும் உட்காரவைத்து அழைத்துக்கொண்டு நேராகத் திருவல்லிக்கேணியை நோக்கி வந்தார். துபாஷ் முதலியாரது மனதிலோ இன்னதென்று விவரிக்க இயலாதவிதமாய் ஏதோ ஒரு இயந்திரம் வேலை செய்து கொண்டே சென்றது. வண்டி திருவல்லிக்கேணி டிராம்ரோட்டில்வந்தவுடன், பண்டி வெங்கடேச நாயகன் தெருவில், அதை நிறுத்திவிட்டு மூவருமாக இறங்கிக் கால் நடையாக ஆலங்காத்தா பிள்ளைத் தெருவில் சாரங்கபாணி காட்டிய வைதேகியின் வீட்டை யடைந்தார்கள்.

அந்தோ! வைதேகிக்கோ, "பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்" என்பதுபோல ஒன்றன்பின் ஒன்றாய்ச் சம்பவித்த ஆபத்தை எல்லாம், நீந்தியடித்துக்கொண்டு வந்து பார்த்தால், அடிபட்ட மனிதரைக்காணுமல் தவித்திருக்கும் சமயம் எமகிங்கரர்கள் போலவந்து நின்ற அந்த ஜெவான்களையும், லொள்ளு துரை, சாரங்கபாணி முதலியார் முதலியோரையும் கண்டதும், அவள் வயிற்றில் பெரிய இடி விழுந்துவிட்டது. தனது பாட்டியினால் எந்த நிமிஷம் என்ன விபத்து வந்துவிடுமோ என்று ஏங்கி பயந்து கொண்டிருந்த வைதேகிக்கு சாரங்கபாணி முதலியாரையும், சேவகர்களையும் கண்டவுடன் தன் பாட்டியைத் தான் அனுப்பிய தப்பிதத்திற்குத் தான் தன்னைப் பிடிக்க வந்து விட்டார்கள்," என்று நினைக்கத் தொடங்கியபோதே, துபாஷ் முதலியார், "இந்தம்மா தான் எனக்கு வீணையைப் பெட்டியோடு

விற்ருள். அதற்குள்ள கிரயத்தை சாயந்திரம் இவளிடம் கொடுத்து விட்டு நான் இரவு வந்து பெட்டியைக் கொண்டு போகிறேன் என்று சொல்லி விட்டுப்போய்விட்டேன். பிறகு வண்டி கொண்டுவந்து என் கையாளும் நானும் நம்பகத்தின் மேல் அதைத்திறந்து பார்க்காமல் எடுத்துக்கொண்டு போய்விட்டோம். பிறகு நாங்கள் வீணையை வாங்கிக்கொடுத்த ப்ரபு அதை வாசிக்கவேண்டும் என்று எண்ணி பெட்டியைத் திறந்தார். அதில் ஒரு கிழவியை அடித்து உடம்பை ரத்தவெள்ளமாக்கிச் சாகும்தருவாயில் போட்டிருந்ததைக் கண்டவுடன் உங்களை யழைத்துக் காட்டினேம். இந்தப் பெண்தான் என்னிடத்தில் பணத்தை வாங்கிக்கொண்டவள்; அப்போது நான் வரும்போது இங்கு ஒரு கிழவியும் இருந்தாள். அவளை நான் அப்போது பார்த்திருந்தபடியால், அந்தப்பெட்டியில் கிடந்தவள் அதே கிழவி என்பதை நன்ருய் அறிந்தேன். எங்களை மோசம் செய்தவள் இவள்தான்.'' என்று அழுத்தமும் திருத்தமுமாய்க் கூறியதைக் கேட்ட வைதேகிக்கு இன்னதென்று சொல்ல இயலாத விதமாய் மனம் குழம்பிவிட்டது. தான் பூமியில்தான் நிற்கின்ருேமா ஆகாயத்தில் தான் பறக்கின்ருேமா என்பது அவள் மனதில் எண்ணறியாவிதமாய் என்னென்னவோ துயரமெல்லாம் ஒன்று கூடி ஏககாலத்தில் ஆயிரம் வாள்கொண்டு அறுப்பதுபோல அவள் மனத்தை அறுக்க வாரம்பித்தது. அவள் என்ன பதில் சொல்வதென்பதை யறியாது எதிர்பாராவிதமாய் நேர்ந்த அந்த அபாண்ட பழியைக் கேட்டவுடன் அவள் உயிரே அவள் தேகத்தைவிட்டு வெளிக்கிளம்பி விட்டதென்று சொல்லவேண்டும். அந்த நிலைமையில் அவள் தன் பாட்டியின்மேல் அதற்கு முன் கொண்டிருந்த கோபமெல்லாம் அப்போது துபாஷ் முதலியார் சொன்னதிலிருந்து, 'அடித்து ரத்தவெள்ளமாய்ப் போட்டிருந்தது' என்பதைக் கேட்டவுடன் 'அவளை யார் அடித்து இம்சை செய்தார்களோ தெரியவில்லையே' என்ற அனுதாபம் உண்டாகிவிட்டது. அவள் மனதில் எத்தனை திகிலுக்கும் துன்பத்திற்குந்தான் இடமிருக்கும்? அன்று அவளுக்கு நேர்ந்த விபத்துகளை மெல்லத் தாண்டிக்கொண்டு கரை ஏறி எப்படியாவது அந்த வழிப்போக்கனின் ஆபத்தைக் காப்பாற்றினல் போதுமென்று எண்ணிக்கொண்டு வந்த சமயம், அவனைக்

காணுமல், தவித்துநிற்கும் சமயம், அந்த அபாண்டமான பழியையும் சுமத்தித் தன்னைக் குற்றவாளியாகப் பிடிக்க வந்திருப்பதைக் கண்ட அவள் ஒன்றும் பதிலே வாய் திறக்கமாட்டாமல் கல்லாய் நின்று விட்டாள்.

அதற்குள் போலீஸ் ஜெவான், "என்ன யோசனை? நீ வீணையை விற்றேனென்று பணத்தை வாங்கிக்கொண்டு கிழவியை அடித்துப் போட்டு அனுப்பியதற்கு உன் புடவையிலும், இதோ கீழே தரையிலும் கிடக்கும் ரத்தமே சாக்ஷியல்லவா? கிளம்பு; உன்னைக் கைது செய்திருக்கிறோம். உன்னைப்போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோக வந்தோம். உம்; வீட்டைப் பூட்டிக்கொண்டுவா எங்கள் பின்னுலேயே," என்று அதட்டினுன். அதைக் கேட்ட பெண்மணி, என்ன பேசுவதென்பதை யறியாமல், கண்ணில் நீர் தாரை தாரையாக வழிய, குனிந்த தலையை நிமிர்க்காமல் தனக்குள், "ஐயோ! காலவித்யாசத்தில் எல்லாம் இப்படித்தானு ஒன்று சேரவேண்டும்! ஜீவகாருண்யத்தை நோக்கி வீதியில் மோட்டாரினுல் அடிபட்டவரைத் தூக்கிக்கொண்டு வந்து நடையில் படுக்கவைத்ததனுல், அவர் காலிலிருந்து வந்த ரத்தம் என்சேலையில் பட்டிருக்கிறது. கிழவிக்கு யார் என்ன கெடுதி செய்தார்களோ, இவர்கள் அதையும் இதையும் ஒட்டி என்தலைக்குக் கல் கொண்டுவந்து விட்டார்களே! ஐயோ நான் இனி எவ்வளவுதான் நியாயத்தைக் கூறினுலும், இவர்கள் ஜோடிப்பைவிட்டு என்னை விடுவார்களா? மேலும், என் சேலையே இவர்களுக்கு முக்கியசாக்ஷியாய் விட்டதே. இனி நான் என்ன செய்வேன்! இவர்கள் பின்னேடுதான் சென்று தீரவேண்டும் போலிருக்கிறதே!" என்று பலவாருய் எண்ணமிட்ட வண்ணம் அவள், நல்ல புத்திசாலியும், படித்த விவேகியுமாகையால் தலைகுனிந்த மேனியாகவே நின்று அவர்களோடு பேச ப்ரியமில்லாதவளாயும், தான் என்ன பேசினுலும் அவர்கள் தன்னை விடமாட்டார்கள் என்பதை நன்குணர்ந்தவளாய் வாய் திறவாமலும் "ஈசன் ஒருவனில்லையா, அவன் விட்ட வழிதானே இது. இந்த சமயம் இவ்விதம் விதித்திருக்கிருன் போலும். அதை அனுபவித்துத்தானே தீரவேண்டும். எவ்விதம் விட்டாலும் அவனருள். எல்லாவற்றிற்கும் அவனடியையே நம்பி இருக்கிறேன். என்னைக் காத்தாலும் கைவிட்டாலும் எல்லாம் அவன் செயலன்றே. அப்

படியே நடக்கட்டும். எந்தத் துன்பத்திற்கு என்னை ஆளாக்கினாலும் என் கற்பை மாத்திரம் காத்தருளினால் அதுவே எனக்குப் போதும்'' என்று நினைத்து வெறுப்போடும், தொண்டை யடைக்கும் துக்கத்தோடும், ஹிருதயம் வெடித்துவிடும்படியான க்லேசத்தோடும், கண்ணீரைக் கானாறாய் ஓடவிட்டவண்ணம், வாசல் கதவைப் பூட்டிக் கொண்டு வெகு பரிதாபகரமாய் வாய் குழற ''ஐயன்மீர்! அடியாள் இதோ வந்துவிட்டேன்.'' என்று குயிலினுமினிய குரல்போன்ற குரலால் தடுமாற்றத்தோடு கூறினாள். அதற்குள் ஒரு ஜெவான் தன் சட்டைப்பையிலிருந்து ஒரு பளபளப்பான விலங்கொன்றை எடுத்து வைதேகியின் கையில் பூட்டவரும்போது, அதைக்கண்ட பெண்மணி ''ஐயா! நான் நீங்களழைப்பதற்கு முன்னமேயே வந்துவிட்டேனே. எனக்கு இதெல்லாம் எதற்கு? உங்கள் கூடவே வரும் நான் எங்கே போய்விடுவேன். அந்த பயமே வேண்டாம்'' என்று தலை குனிந்தவாறே கூறினாள்.

அதைக்கேட்ட மற்றொருவன் ''கையை இழுத்து மாட்டடா. வீணையை விற்கிறேன் என்று பணத்தை வாங்கிக்கொண்டு, கிழவியை அடித்து, வதைத்துப் பெட்டிக்குள் போட்ட கெட்டிக்காரக் கள்ளியல்லவா இவள்; இவள் தேனொழுகப் பேசுவதைக் கேட்டுப் பயந்து மயங்குகின்றவர்கள் நாமா? இழுத்து மாட்டடா'' என்று அதட்டினான். அதைக்கேட்ட நம் மடமயிலாள் இடியோசையைக் கேட்ட நாகம்போல அப்படியே நடுங்கிவிட்டாள். ''ஐயோ இந்தச் சண்டாளனா நம்முடைய கையைத் தொட்டு விலங்கை மாட்டவேண்டும்? நம் மேல் வீணான குற்றம் கொண்டு வந்திருப்பது போதாதென்று என்னைத் தீண்டியும் விலங்கிடவேண்டுமா? ஐயோ! என்ன செய்வேன்! இவ்விதமா என் தலையில் எழுதவேண்டும்?'' என்று எண்ணித் துயரம் தாங்காமல் வாயை விட்டும் சற்று கதறிவிட்டாள். அதற்குள், ''அடேய்! மணியாகிவிட்டது. சீக்கிரம் நடத்துடா வேலையை.'' என்று ஒரு ஜெவானை லொள்ளுதுரை ஏவ, அவன் வைதேகி எதிர்பாராவிதமாய்க் கையை இழுத்து விலங்கை மாட்டி விட்டான். தான் எதிர்பாராவிதமாய், அவ்விதம் நடந்ததைக் கண்ட வைதேகியின் உயிர் கிளம்பி விட்டதென்றே சொல்ல வேண்டும். அத்தகைய நிலைமையில் அவள் இன்னும் தன் கையைப் பிடித்து

இழுக்கப்போகிறுனே என்ற பயத்தினுல், தானே முன் ஜாக்கிரதை யாகப்படியை விட்டு, ரோட்டில் இறங்கினுள். உடனே மற்றுமுள்ள வர்களும், அவளை யழைத்துக்கொண்டு முன்வந்த வழியாகவே சென்று, அங்கு நிற்க வைத்திருந்த குதிரைவண்டியில், வைதேகியை ஏறச் சொன்னுர்கள். அவள் அதற்கு இணங்காமல், "ஐயா! இதோ இருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக வண்டி எதற்கு? நான் நடந்தே வருகிறேன். நீங்கள் எனக்காகச் சிரமப்பட்டு நடக்கவேண் டாம். வண்டியை மாத்திரம் சற்று நிதானமாய் ஓட்டிக்கொண்டு போனுல் நான் கூடவே வருகிறேன். எனக்கு வண்டி வேண்டாம்" என்றுள்.

அதைக் கேட்ட லொள்ளுதுரை அதட்டிய குரலாய், "உன்காவ நாங்க வண்டியெ மொள்ளமாய் உட்றதுண்ணு, நேரம் ஜாஸ்தியாய்ப் பூடும். நீ ஏறு வண்டியில். இப்போது உன்சொல்லைக் கேக்ரவர்கள் யாரும் இல்லை. எங்க பேச்சைக் கேக்கவேண்டியதுதான் உன்வேலை. முன்னுல் ஏறு வண்டியில். ஏறுகிறுயா அல்லது, தூக்கிப்போடச் சொல்லட்டுமா?" என்றுன்.

அதைக் கேட்ட வைதேகி இன்னது செய்வதென்று அறியாமல் தத்தளித்துத் தவிக்கிறுள் பாவம். "ஐயோ! இவர்கள் பண்ணும் இம்சை எல்லாம் போதாதென்று இந்தப் பரிபவமும் செய்யவேண் டுமா? ஐயோ! கையில் விலங்கை மாட்டியதுபோல எதற்குமஞ்சா நெஞ் சையுடைய இவர்கள் எதை வேண்டுமானுலும் செய்வார்கள். நாம் இவர்களிடமிருந்து தப்பும்வழி ஈசனுக்கல்லாது வேறு யாருக்கும் தெரியாது. இவர்கள் கையால் நம்மைத் தூக்கிப் போடுவிதைவிட நாமே மரியாதையாய் ஏறிவிடுவோம்" என்று எண்ணி மெல்ல தானேயேறி உட்கார்ந்தாள். பிறகு லொள்ளுதுரை, சாரங்கபாணி முதலியார், இன்னுமுள்ள சேவகர் ஆகிய எல்லோரும் முன்பக் கமும் பின்பக்கமுமாய் வண்டியில் உட்கார வண்டி விசையாய்க் கிளம்பி, தேனும்பேட்டையில் தாங்கள் முன்புறப்பட்ட வீடு திக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு வைதேஹியை இறக்கித் தனியாக விருந்த மற்றெருரு சிறையில் கொண்டு போய்விட்டு "காலையில் உன்னை விசாரிப்போம். அது வரையில் நீ இந்த சிறையில் இருக்க வேண்டும். பிறகு வேறு இடத்தில் போட்டு விடுவார்களோ.

அல்லது எவ்வித தண்டனையை விதிப்பார்களோ தெரியாது, நீ செய்திருக்கும் வேலைக்கு.'' என்று ஒரு ஜவான் சொல்லிக்கொண்டே அங்கு அவளைப்போட்டுப் பூட்டிவிட்டு அப்பால் சென்று விட்டான். அங்கிருந்து புறப்படும்போது, துபாஷ் முதலியாரை சபாஷ் முதலியாராக்கி விலங்கை விலங்கச்செய்து அழைத்துக் கொண்டுபோன போலீஸ் லொள்ளுதுரை, வந்தவுடனே அவருக்கு விலங்கை மாட்டி வேறொரு விடுதியில் போட்டுப் பூட்டிவிட்டு, வைதேகி இருந்த விடுதியண்டை, மூர்ச்சித்துக் கிடந்த கூனற்கிழவியை அந்த வீணைப்பெட்டியோடு கொண்டுவரச் செய்து அதைக்காட்டி, ''இது யார் பார்த்தாயா? உன் பாட்டியை ரகஸியமாய் அடித்து அனுப்பிவிட்டதை அம்பலம் சிரிக்கவைத்து விட்டார் பார்த்தாயா ஈசன்? இப்போது உன்னை நாங்கள் பிடித்தது சரிதானே'' என்று ஓர் உருமு உருமிவிட்டுப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு அப்பால் போய் விடச்செய்தார்.

கூனற்கிழவியின் ரத்தவெள்ளத்தையும், அவள் மூர்ச்சித்துக் கிடந்த கோரத்தையும் கண்ணால் நேரில் பார்த்த பிறகு வைதேகிக்குத் தாங்கமாட்டாத துக்கம் வந்துவிட்டது. ''ஐயோ! நாம் ஒன்று எண்ணினால் தெய்வம் ஒன்று எண்ணிவிட்டதே. அந்தோ! கிழவிக்கு வயதாகியும் நல்ல வழியில் புத்தி செல்லாமல் தீயவழியில் செல்லுகின்றதே! நாம் இப்படிச்செய்து காட்டினாலாவது நல்லவழி திரும்புவாள் என்ற நினைவோடு நான் செய்தவேலை அவளைக் கொலை செய்யும் தருவாயில் கொண்டுவிட்டு என்னையும் இக்கதிக்கு ஆளாக்கிவிட்டதே. என்ன கொடுமை இது! ஆ! நாளைக்கு விசாரிக்கப் போகிறார்களாமே! என்ன செய்வேன் நான்! அந்த நியாயாதிபதியின் எதிரில் போய் எப்படி நிற்பேன்! ஐயோ! ஈசா? இதுவும் உன் திருவிளையாடலோ! ஆலங்காத்தா பிள்ளைத் தெருவில் புலம்பிக்கொண்டிருக்கையில் நீ சற்று, உனது திவ்யமங்கள விக்ரக ரூபத்தை எனக்குக் காட்டி என் கலியைத் தீர்ப்பவன்போலத் தோன்றி மறைந்தாயே! உடனே உத்தர க்ஷணத்தில் இப்படிப்பட்ட துயரமெல்லாம்சம்பவித்துக் கடைசியில் பெரிய ஆபத்தில்வந்து இறக்கிவிட்டதே! ஆ!நானென்செய்வேன்? என் தலையில் எத்தனையோ துயரமெல்லாம்பட எழுதிவைத்திருக்கிறாயே! இந்தச்சிறைவாசம்கூடவா நான் செய்யவேண்டிஎழுதிவிட்டாய்! ஐயோ! ஜகதீசா! என்னை எதற்கு இப்பூவுலகத்தில் படைத்தாயோ?'' என்று

கண்ணீர்விட்டுக் கலங்கிக்கொண்டிருந்த சமயம், நமது லொள்ளுதுரை யும் மற்றெரு சேவகனும் வந்து வைதேகி இருந்த சிறையைத் திறந்து "ஏ விணேக்கள்ளி ! எழுந்திரு; வா இப்படி வெளியில். இந்த இடத்தில் நீ இருக்கக்கூடாது என்று உன்னே மற்றெரு சிறைச் சாலேக்கு அழைத்துச்செல்ல உத்தரவு வந்துவிட்டது. கிளம்பு; மறு பேச்சு பேசினுல் செத்தே. எழுந்திரு" என்று அதட்டினுர்கள். நமது அருங்குண நிதியாகிய வைதேகி நடுநடுங்கி, மறுமொழி கூருமல் அவர் கள் சொன்னபடியே வெளியில் வந்து நின்ருள். உடனே இருவரும் அவளே வேருெரு பக்கமாக அழைத்துக்கொண்டு வீதிக்குச் சென்று அங்கு ஆயத்தமாய் நின்றுகொண்டிருந்த ஒரு மோட்டார் வண்டி யில் அவளே ஏறச்செய்து அதை உடனே முடுக்கிவிட்டார்கள். அது வாயுவேக மனேவேகமாய் ஒரு நாழிகைகாலம் சென்று மறுபடி ஒரு கட்டிடத்தின் வாயிலில்வந்து நின்றது. உடனே இருவரும் வைதே கியை இறக்கி அந்த விடுதிக்குள் அழைத்துக்கொண்டு போய் முன் வைத்திருந்ததுபோலவே காணப்பட்ட மற்றெரு சிறையில் அவளே விட்டுப் பூட்டிவிட்டு இருவரும் வெளியில் போய்விட்டார்கள்.

தனியாக விடப்பட்ட நமது ஆரணங்கான வைதேகி மனதில் இவ்வளவு துக்கந்தான் என்பதை யறியமாட்டாமல் துக்கசாகரத்தி லேயே மிதப்பவள்போல விருந்தாள். அத்தருணம் அவள் கண்ணி லிருந்து வடிந்த நீரானது பெரிய சாகரம்போலவே காணப்பட்டது. அத்தண்ணீரில் மிதக்கும் அவளுடைய சிரத்தின் கேசமானது கட லின் அலேகளேப்போல புரண்டு புரண்டு படிப்படியாய் இடைவிடாது மடிவதைப் பார்த்தால் அது கடலலேபோலவும், அவளது கண்ணு ணியகமலங்கள் கடலில் சதாவாசம் செய்யும் கெண்டை மீனேப்போலவும், அவளது அழகிய கண்ணுடிபோன்ற கன்னங்கள் கடல மணற் பாங்கில் வெளேலென்று அழகாய் விழுந்துகிடக்கும் கிளிஞ்சல் என் னும் ஒருவகைப் பூச்சிக் கூண்டின் பின்புறம் எவ்விதமிருக்குமோ அவ்விதமும் காணப்பட்டன. அவளது பால் வடிந்த முகமானது ஆகாயத்தில் ஜ்வலிக்கும் மதியின் பிரதி பிம்பம் கடல் நீரில் எப்படி பிரகாசித்து அலேகளோடு கூடப்புரண்டும் மறைந்தும் தெரிகின்ற தோ, அதேபோல அவளது முகமும் வருத்தத்தால் வாடிவருந்தி அவள் கண்ணேத் துடைக்கும்போது மறைந்தும் மற்றைப்போது மறை

யாமலும் பிரகாசித்தது. சாதாரணமாய் அந்த இடத்தில் ஒரு சிறிய கடலை நிர்மித்திருப்பது போலவே காணப்பட்டது. அவளது கண்ணீர் பெருகப்பெருக அவள் மனத்துயரமோ அளவிலடங்காததாய் விட்டது. அவள் என்ன செய்வாள் பாவம்! அழுதகண்ணும், தொழுத கையுமாய், ''ஆ! பரம் பொருளே! நான் எதற்கென்று அழுவேன்? என்னை இத்தனைநாளும் இவ்வித பெரிய ஆபத்திற்கெல்லாம் ஆளாக்காமல் காத்தருளிய கருணைவள்ளல் இனியும் காப்பாற்றுவார், காப்பாற்றுவார் என்றுஎண்ணிநான் இருந்ததெல்லாம் என்னைத்தீராதவேதனைக்கு உட்படுத்திஎன்றும் மாறாத சிறைவாசத்தையும் எனக்குக்காட்டிக்கோரமான கொடும்பாவி என்ற பெயரை வாங்கி வைத்து விட்டாயே. இனி இந்த ஜென்மம் இருந்தென்? இறந்தென்? ஐயோ! சிறிய வயது முதல் உலகத்தவரைப்போலத் தாயென்றும், தந்தையென்றும், உடன் பிறந்தார் உற்றாரென்றும் எவரையும் அறியாத மாபாவியாகவே வளர்ந்து வந்த என்னைக் கடைசியில் இவ்விதமெல்லாம் ஆட்டவா காத்திருந்தாய்? என்பாட்டியைத் தவிர்த்து இவ்வுலகில் நான் வேறு மனிதர்களை உறவென்று கண்டதில்லை. என்னை எவ்வளவோ செல்வமாய் வளர்த்த பாட்டியே எனக்குக் கொடுமை செய்யும்படியான புத்தியை நீ என் அவளுக்கு அளித்தாய்? ஆக்குவது, அழிப்பது எல்லாம் நீயன்றோ? நீயே மனிதருக்கு இவ்வித தீய புத்தியைக் கொடுப்பதனால் விளைந்த பயனல்லவா இது? ஐயோ! நாம் இவ்வீரெட்டு ஆண்டாய் நம்மை ஈன்றவர்களாகிய தாய்தந்தையர் இல்லாமல் புவியிலிருக்கிறோமே. அவர்கள் யார்? எங்கே இருப்பார்கள் என்று நான் புலம்பித்தவித்து, ஈசா!

விருத்தம் - முகாரி ராகம்.

தறையினிலுதித்த நாளாய்த் தந்தைதாயாறிறந்த
குறையொரு பாலிருக்கக் கொடிய விக்கிழவிதன்னால்
பிறர் பல நகைத்திங்கேசிப் பிழைகள் கூறிடவுமிந்தச்
சிறைதனில் வைத்தாய் அந்தோ! செய்வதொன்றறிகிலேனே.

ஈசா! என்பாட்டியினாலேயே எனக்கு இவ்வித விபத்தைக் கூட்டிவைக்க வேண்டுமோ! ஐயோ! நம்மை ஆகாயமே திடீரென்று போட்டுவிட்டது; பூமியே ஏந்தி வளர்த்தது; இனிப் பெற்றவர்களைக் குறித்து, வருந்தினால் வரப்போகிறார்களா; அவர்களைப் பிறக்கும் போதே விழுங்கிவிட்டோமே.'' என்று என் மனத்தை நானே தேற்

றிக்கொண்டு,சிவனே என்று காலத்தைப் போக்கிவந்த என்னே, என்னே வளர்த்த பாட்டியே ஏன் கெடுக்க எண்ணவேண்டும்? ஐயோ! இதெல்லாம் நான் செய்த தீவினையின் பயனேயன்றி வேறொன்றும் இல்லை. அந்தோ! மலையத்தனை பாவத்தில் கடுகளவு புண்ணியம் செய்திருக்கிறோம். அதனாலேயே தான், நான் என் மனமுடைந்து, துயரப்பட்டுக்கொண்டு, வருந்திக் கண்ணீர் வடித்திருக்கும் காலையில், என் வீட்டு வாசலிலேயே மோட்டாரினால் விபத்து நேர்ந்து, என் வீட்டுப் படியிலேயே விழுந்துகிடந்த சுந்தர ரூபலாவண்யமுடைய உத்தமரின் ஆபத்தை நீக்கவெண்ணி, அவரை எனது வீட்டு நடைத் திண்ணையில் கொண்டுவந்து கிடத்திவிட்டு, அவரை உற்றுநோக்கியதும் என் மனதில் ஒருவிதமான தைரியம் தோன்றி,

விருத்தம் - தன்யாசி.

சித்தமும் கலங்கி உள்ளம் சிதறியே இருக்குங் காலை
உத்தமன் முகத்தின் சேவை ஒருமுறை கிடைக்க வென்றன்
பெற்றவ ரில்லாக் கண்ணீர் பெருக்கிய துயரம் நீங்க
இத்தின மினிதேயாகு மினிக்குறை நீங்கியேகும்.

அகவற்பா - சஹானா.

என்றுநா னெண்ணி நன்றெனக் கருத
இருந்தனவெல்லாம் மறைந்தன இந்தச்
செந்தலைப் பூச்சி வந்தெனை வருத்திக்
கொடியவிச் சிறையில் விடுத்துமே சென்றான்.
ஐயோ! யானிந்த வையகம் தனிலே
மங்கையாய் ஜனித்துச் சங்கையைத் தவிர்த்து
ஈரெட்டு ஆண்டாய் வேறொன்று மறியேன்.
கண்ணீர் விடுத்துப் புண்ணாய் நெஞ்சம்
கதறியே நித்தம் பதறின தய்யோ
ஈசா! உனக்கு நேசமா மிந்த
அடியாள் வருந்தும் நெடுநாள் துயரம்
உன்செவிக்கெட்டாது என்றன் வினையே.
பிறந்தநாள் முதலாய்ப் பரிந்துமே வளர்த்த
பாட்டியு மின்று காட்டினாள் கொடுமை

இத்துய ரெல்லாம் உத்தமர் தன்னுல்
நீங்கிடும் என்றே ஏங்கினேன் பாவி
ஒரு முறை கண்ட திருமுகந் தன்னை
மறுமுறை காணு துருகுமென் நெஞ்சம்
இருவினைப் பயனே ஒருகணந் தன்னில்
சுந்தரப் புருடர் விந்தையாய் மறைந்தார்
அந்தோ! இனியான் எந்தவித மவரைத்
தேடிப்பணிந்து கூடுவேன் பாதம்
அத்தினம் இந்த மெத்த பாவிக்கு
வாய்த்திடுமோ மெய் மாய்த்திடு வேனே
யாதையு மறியா வேதனை யுற்றே
ஆவியை நீத்தே பாவி இன்புறுவேன்
அன்னவர் முகமலா தின்னெரு முகத்தை
ஆவிதான் போயினும் பாவியான் நோக்கேன்.
திண்ணமாய் மனத்தில் எண்ணினேன் பாவி
சிதரன் அருளும் யாதோ அறிகிலேன்
பாதத்தை நம்பிப் பேதை பணிந்தேன்

ஜகதீசா! எல்லாம் உன்னருள் அன்றோ! நான் பிறந்த நாள் முதலாய் என் மனத்தில் உதிக்காத ஓர் அபூர்வமான எண்ணம் அந்த உத்தம புருஷனைக்கண்டவுடன் என்மனதில் உதிக்கவேண்டிய காரணமென்ன? என் பாட்டி எனக்கு இதுவரையில் காட்டாத புகைப் படமில்லை! காட்டாத விடபுருஷரில்லை; எல்லோரையும் கண்டபோ தெல்லாம் ஏன் ஓர் துரும்பிற்குச்சமமாய் எண்ணிய மனத்தில், இந்தச் சுந்தரவடிவம் மாத்திரம் கண்டவுடன், என் ஹிருதய கமலத்தில் போய் அழுந்திப் பதிந்துக்கொண்ட ஆச்சரியமென்ன! ஆஹா! அவரது பரிதாபகரமான தருணத்தில் நாம் அவரை நம் கையால் ஆதரித்து வேண்டிய சிகிச்சையாவது செய்வோம். நாம் தாம் பிறவியில் குலஸ்தர்கள் கண்டு ஏளனமாய் நகைக்கும் கேவலமான தாசி ஜாதியில் பிறந்து விட்டோம். இந்த உத்தமனோ நல்ல குலத்தில் உதித்த வீரராய் இருப்பார். இவரை நாம் மனதில் எண்ணியதும் அசம்பாவிதமே. இவர் நம்முடைய வீட்டு வாசலில் வந்து விழுந்து விடவே, நாம் இவரைக்கண்டுக் கலக்கங் கொண்டதற்குப்

பலனுக அவர் பாதத்தையாகிலும் தொட்டு, நாம் சிகிச்சை செய்து, அவர் நன்றாய்த் தெளிந்தபிறகு, அவரை யார் என்பதையும், என்ன ஜாதி என்பதையு மறிந்துகொண்டு, நாம் காதலித்ததற்கு ஏதாவது பலன் கிடைக்கும்போல விருந்தால், வெளியிடுவோம். இல்லையேல், ஒருவரை மனத்தில் வரித்தபிறகு மற்றொருவருக்கு மாலை இடுவதில்லை. கன்னிகையாகவே காலத்தைக்கழிக்கலாம். இவரை என் ஹிருதயத்தில் எண்ணியபிறகு மற்றொருவனையடுத்து, மானம்கெடுத்து, என் னுயிர் வாழ்வதில்லை என்று சபதம் செய்துகொண்டு, டாக்டருக்காகச் சென்று, அலைந்து, இடையில் நேர்ந்த ஆபத்தை எல்லாம் நீந்திக் கொண்டுவந்து, எல்லா வரலாறுகளையும் என் மனத்தைக்கவர்ந்த மன்னரிடம்உரைத்துக்கொண்டிருந்தபோதே அவர் திரும்ப ப்ரக்ஞை யற்றுப் போகவும், மறுபடி எனது சிநேகிதையால் வைத்தியரையழைத்துவந்து சேர்வதற்குள் அவர் எப்படி மாயமாய் மறைந்துவிட்டாரோ? இதுவும் என் பாவத்தின் பயனல்லவா ? வீட்டு நடையில் படுத்திருந்த நோயாளியைக் காணுமல் போனது, எனது துரதிருஷ்ட வசமேயன்றி வேறல்ல. நான் ஜென்மம் எடுத்ததே பிறந்தநாள் முதலாய் இறக்கும் நாள் வரையில் கண்ணீர்விட்டுக் கலங்கவோ பிறந்தேன்! ஐயோ! இப்பூவுலகில் என்னைப்போலக் கொடியபாவி யாராகிலும் இருப்பார்களோ! அடடா! எத்தனையோ ஜந்துக்களையும், மானிடப் பிறவிகளையும் ஈசன் படைக்கின்றுன். அவற்றுள் என்னைப்போல மந்தபாக்யவதியும், அதிர்ஷ்டஹீனியுமான பிறவி இருக்கவே இருக்காது.

ஆஹா! நான் எனக்கு நேர்ந்த துயரத்தை எல்லாம் மறக்கக் கூடும்போல விருக்கிறது. அந்த உத்தம புருஷன்மீது சென்று லயித்துப்போன இம்மனத்தை நான் எவ்விதம் திருப்புவேன்? அதை என்னுல் மறக்கவே முடியாதுபோல விருக்கிறதே. நான் என்ன செய்வேன்? 'கிட்டாதாயின் வெட்டெனமற' என்கிறபடி நமக்குக் கிட்டாமல் வைத்துவிட்ட வஸ்துவின்மேல் இனி மனமே செல்லாதே, என்று சொல்லலாமா என்று எண்ணும்போதே அவருடைய ஒவ்வொரு அங்கமும், நகம்முதல் முகம்வரையில் உள்ள அழகு வழிந்த சேவை, என் அகக்கண்ணிற்கு இப்போதே நன்றாய் தரிசனம் ஆவது போல விருக்கிறதே. ஐயோ! நான் அன்னவரின் நினைவை எவ்விதம் மறப்பேன்? மறந்தும் உயிருடன் இருப்பேனு? ஹா! சர்வேச்வரா!

என்னைப்படைத்த உன்னிடமல்லாது நான் யாரிடம் முறையிடுவேன்! கோரிய கடவுளே! என்னால் இந்தத் துயரமெல்லாம் இனி ஒரு கணமுந்தாள முடியாதென்பதை நீ யறியாயா? ஐயோ! இன்று மாலையில் என் மனம்பட்ட கஷ்டமும், உடனே மன்மதனைப் பழிக்கும் வடிவுடைய மன்னனைக் கண்டதால் உண்டான அற்பநேர கிஞ்சித் சந்தோஷமும், அப்பொழுதேஎல்லாவற்றையும் ஒருங்கே வெள்ளம் அடித்துக்கொண்டு போவதுபோல, என்னுயிர் ஒன்றைத்தவிர பாக்கி எல்லாவற்றையும், அரை நிமிஷத்தில் உன் மாயையால் மறைத்து என்னை இவ்விதம், துயருறவைத்தது உனக்கு அழகா? ஆ!, என்னை இவ்விதம் வருத்துவதைவிட என் உயிரை அரை நொடியில் உன்னிடம் சேர்த்துக்கொள்ளலாகாதா? பாவியேன் பட்டதெல்லாம் போதாதென்று இச்சிறையிலும் அடைத்து, அந்த செந்தலைக்கொள்ளி எறும்புகள்வந்து என்னை என்ன செய்வார்களோ தெரியவில்லையே! ஐயோ! அவர்கள் நாளைக்கு என்னை விசாரணை ஸ்தலத்தில் கொண்டுபோய் விசாரிக்கப் போவதாகக் கூறினார்களே. ஆ! அந்த மானக்கேட்டைவிட என்னுயிரை எவ்விதமாகிலும் மாய்த்துக்கொள்வதே நலம். மானமழிந்தபின் பிராணனை வைத்து வாழ்வதைவிட அவ்வுயிரைத் துறப்பதே சிறந்தது. அந்தோ! இரவும் நடுநிசி சமயமாயிருக்கும் போலத்தெரிகிறது. இன்னும் கொஞ்ச நேரம் கழிந்தால், உதயமும் ஆகிவிடும். பிறகு அந்த எமகிங்கரர்கள் வந்து விடுவார்களே. ஐயோ! நான் என்ன செய்வேன்! இந்தப் பாழும்சிறையில் ஒரே இருட்டு மயமாக விருக்கிறது! இந்த இடத்தில் நாம் எந்தக் கருவியைக்கொண்டு உயிரை மாய்த்துக் கொள்கிறது? ஐயோ! என்னை என்னவோ இந்தப் போலீஸார்கள்வெறுமனேவிடமாட்டார்கள். வெறும்வாயைமெல்லுகிற அவ்வையாருக்கு ஒருவாய் அவல் அகப்பட்டதுபோல் ஏற்கெனவே என்னைக் கருவிக்கொண்டிருந்த சாரங்கபாணி முதலியார் சாக்ஷியாக வந்த பிறகும், வீணைப்பெட்டியில் என்பாட்டியை நான் வைத்தனுப்பியது உண்மையான விஷயம் என்று அவன் சாக்ஷிசொல்ல ஆஜராகத்தயாராயிருக்கும்போதும் நான் தப்புவதெங்ஙனம்? மேலும் என்புடவையின் ரத்தம் ஒரு சாக்ஷியாய்விட்டது. எல்லாம் ஒன்றுகூடி என் தலைக்கே கல்வைத்து விட்டதே. இனி தப்ப வழியில்லாது மானமழிவதைவிட என் உயிர்போவதில் எனக்குக் கொஞ்சங்கூட வருத்தமில்லை. எல்லாம்

நீங்கிச் சந்தோஷமாய்விடும். எதற்கும் பிரயோஜனமில்லாத இந்த உயிர் எதற்கு பூபாரமாய் இருக்கவேண்டும்? இத்தனை நாள் இதை நான் சுமந்ததுபோதும்; இனி இதற்குச் செலவு கொடுத்து அனுப்பி விடவேண்டியதுதான் சிலாக்கியம். இதைவிட வேறுகதியில்லை. இஜ் ஜென்மம் எடுத்ததற்குப் பலனாய் ஒன்றில்லாவிட்டால் ஒன்றாகிலும் நன்றாயிருந்தால், ஒன்று இல்லாவிட்டால் ஒன்றைவேண்டி உயிர் வாழவேண்டும். அந்த அம்சத்தில் எதையும் அடியாள் பெற்றவ ளன்று. பிறந்ததற்கு அடையாளம் பெற்றோரில்லை. பிறந்த குலமோ தாசிகுலம்; வளர்த்த பாட்டியோ எனக்குச் சத்துருவாய் விட்டாள். எல்லாம் நிற்க, இடையில் கருமேகத்தின்நடுவின் மின்னல் மின்னுவதுபோல, என் துயரம் பலவற்றிற்கும் நடுவில், ஒரு கணப் பொழுதில் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட சுந்தரபுருஷனும் மாயமாய் மறைந்து விட்டார். அவர் மாயமாய் மறையாமலிருந்தாலும், தாசிவகுப்பில் பிறந்த எனக்கும், உயர்குலத்தில் உதித்தவரான அவருக்கும், எப்படிப் பொருத்தம் ஏற்படும்? ஒன்றுக்கொன்று அஜக ஜாந்திரமாய் விட்டது. நாம் வீணாய் ஒருவர்மீதில் மனத்தை லயிக்கவிட்டு, பிறருடைய உபத்திரவத்திற்காக, இன்னொருவரைச் சாஸ்திர விரோதமாய் மணந்து உயிர் வாழ்வதைவிட, எல்லாவற்றி லும் மேலாக நாம் இறப்பதே உசிதமான வேலை. அவைகளெல் லாம் போதாதென்று இந்த அபாண்டமும், அவமானமும் வந்து வாய்த்ததை என்னால் அரை நிமிஷமும் தாளமுடியாது. ஏ கருணை வள்ளலே! கமலலோசனி! உங்கள் அருள் எனக்கு எவ்விதத்திலும் கிடைக்காமல் செய்து விட்டீர்களே! இவ்வொன்றிற்கு மாத்திரமாவது உங்கள் கடைக்கண் பார்வையை என்மேல் செலுத்தலாகாதா? அம் மாத்திரம் உபகாரம் என்பால் மனமிரங்கிச் செய்து என்னை உன்ன டிக்கு ஆளாக்கலாகாதா? இத்துயரத்தை என்னால் சகிக்கமுடியவில் லையே. இது உனக்குத் தெரியாதா? ஏ பரம்பொருளே! என் னுயி இந்த ராத்திரிக்குள் நீங்கி விட்டால் என்னைப்போல புண்ணியவதிஇவ் வுலகத்திலேயே இருக்கமாட்டாளென்று உறுதியாய்க் கூறுவேன். இவ்வொரு உபகாரம் மாத்திரம் நீ எனக்குச் செய்தே தீரவேண்டும்; உன்னையே அண்டினேன். உன்னையல்லாது இப்பாரில் இப்பாவிக்கு வேறு துணை உண்டோ! நீயே என்னைப் படைத்தாய். நீயே என்னை அழித்துவிடு" என்று தன் பாட்டில் தான் தலையைத் தூக்

காது கண்ணீரை வடித்துக்கொண்டு, துக்கசாகரத்தில் மிதந்து கரை யறியாது, கதறிப்பதறிப் புலம்பிப் பரிதியைக்காணுப் பங்கயம் போல வாடி, வதங்கி, துவண்டு சோர்ந்துபோய் விட்ட நமது பெண்மணி வைதேகி, படுத்திருந்த இடத்தைவிட்டு மெல்ல எழுந்து, அந்தக்காரி ருளில் தன்கையாலேயே சுற்றுமுற்றும் தடவிக்கொண்டுபோக, அங்கு அவளுக்கு எவ்விதமான சாமானுவது, வேறு எதுவாவது, அவளது கைக்குத் தட்டவில்லை. என்ன செய்வாள் பாவம்! மனமோ கொதித் துக்கொண்டிருந்தது. அவள் அன்று ஆகாரமே கொள்ளவில்லையாதலா லும் அவ்வளவு நேரம் கண்ணீர் விட்டுக் கதறி யழுததாலும் அவளையறியாமல் அவளுக்கு ஒருவிதமான களையும் மயக்கமும் மேலிடவாரம்பித்தன. அவள் மெல்ல அந்த அறையை மறுபடி தடவிக்கொண்டே வருகையில், அவளிருந்த சிறை போன்ற அறையில், பளிச்சென்று வெளிச்சம் தோன்றியது. அதைக் கண்ட வுடன் அவளுக்குக்குலை நடுக்க மெடுத்துக்கொண்டது. வெளிச் சம் எங்கிருந்து வந்ததென்பதைக் கவனிப்போம் என்று அவள் பார்ப் பதற்குள் அந்த அறையின் கதவை யாரோ திறப்பதுபோல விருந் தது. அடுத்த நிமிஷம் அறையின் கதவும் திறக்கப்பட்டது. கையில் விளக்குக் கொண்டுவந்த ஒரு மனிதன் அதை அந்த அறையில் வைத்துவிட்டு வெளியில் சென்றுன். மற்றொரு ஆசாமி உள்ளே நுழைந்ததைக் காணவே, வைதேஹியின் வயிற்றில் பெரிய இடி விழுந்தது போலாய்விட்டது. அவள் சிரம் தானுகவே சுழலவாரம்பித் தது. கை கால்களெல்லாம் தானுகவே விடவிடவென்று நடுங்கவாரம் பித்தன. அந்தத் தருணத்தில் வெளியிலிருந்த மனிதன் அந்த அறை யின் கதவைச்சாத்தி வெளிப்பக்கம் தாளிட்டதை உணர்ந்த வைதேஹி யின் உயிர் முக்கால் பாகம் போய்விட்டதென்றே சொல்ல வேண் டும். அவள் ஆவி எமனுலகிற்கும் மண்ணுலகிற்கும் ஊசலாட ஆரம் பித்தது. என்ன செய்வாள் பாவம்! அவ்வளவுநேரம் கலங்கிக் கண் ணீர் வடித்து, உயிர்விட்டு விடுவதென்ற தீர்மானத்திற்கு வந்தும், ஆபத்துக்கள் அவளை விடவில்லையே. தான் எதிர்பாராதவிதமாய்த்தன் னறையில் முகமறியாத அன்னிய மனிதன் வந்து வெகு முடுக்காய் நின்றதைக் கண்ட அவளது மனம் எவ்விதம் துடித்திருக்கும் என் பதை நாம் கூறுமல் யூகித்தறிந்து கொள்வதே நலம். அவள் தத்

தளித்துத் தண்ணீராய் உருகிக்கொண் டிருந்த சமயத்தில் உள்ளே வந்து நின்ற ஆசாமி, வெகு உல்லாசமாகவும், சிரித்த முகத்தோடும் வைதேகியை நோக்கியபடி, "என்ன யோசிக்கின்றாய்? என் கண்மணி! உன்னைத்தேடி நான் வந்ததற்கு நீ சந்தோஷப்படுகின்றாயா? என் மனோரஞ்சிதமே! ஏன் பதறப்பதற நிற்கின்றாய்? இப்படியருகில் வந்து இந்தப் பெஞ்சியின் மீது உட்கார்" என்று வெகு பக்ஷமாயும்,சிரித்துக் கொண்டும் அவளை நோக்கி வந்துகொண்டே கூறினார்.

அதைக்கேட்ட நமது மயிலாளின் தேகம் தானாகவே கிடு கிடென்று ஆடுகின்றது. கண்கள் குபீர் குபீரென்று இருண்டு இருண்டு மறைக்கின்றன. என்ன செய்வாள் பாவம்! ஐயோ! ஆபத்து வந்தாலும் இப்படியா ஒரே காலத்தில் ஆயிரம் தேள்கள் கொட்டுவது போல ஒன்றன் பின் ஒன்றாய் உபத்ரவமாகவே சம்பவிக்க வேண்டும். "ஹா! நான் பூர்வ ஜன்மத்தில் தாக்ஷிணியமின்றி யாரை என்ன செய் தேனோ, அதெல்லாம் ஒன்று கூடி எனக்கு இப்படிப்பட்ட விபத்தாய் வந்து லபித்துவிட்டதே! ஐயோ! அவைகளுக்கெல்லாம் சிகரம் வைத் தது போல, இச்சிறைவாசம் வந்து சேர்ந்ததே என்று நான் கலங்குங் காலையில், இவ்வித எதிர்பாராத பிராணாபத்து வந்து சேர்ந்திருக் கிறதே! என்ன செய்யப்போகிறேன்! ஐயோ! என்னுயிர் இத்தரு ணம் பறந்து போய்விடலாகாதா. ஆ! நான் என்னென்று கதறுவேன், கத்துவேன் என்று வருந்தி வாய் மூடுமுன் இந்த விதமான சிக்ஷை யும் பாக்கியிருந்ததா! ஐயோ! எல்லாவற்றையும்விட இது என் தலைக்குமேல் பெரிய வெள்ளமாய் வந்து மோதுகின்றதே. இந்த வெள்ளத்தினின்றும் நான் எவ்விதம் தப்புவேன்? ஏ ஜகதீசா! அனா தையை இவ்விதம் வருத்துவது உனக்கு அடுக்குமோ? இது தர்ம மாகுமா? ஐயோ! இவ்வேழைமீது நீ கூட இத்தகைய வர்மம் பாராட்டினால் அடியாளுக்கு வேறு யார் கதி? உன்னை நம்பிய என்னை நீ கைவிடுவதைவிட என் ஆவியை உன்னிடம் சேர்த்துக் கொள்ள லாகாதா? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல இன்று மாலை நாலுமணி முதல் என்னை ஒரு பெரிய சனியன் கெட்டி யாய்ப் பிடித்துக்கொண்டு ஆட்டுகின்றதே. ஏ சனிபகவானே! நீயாவது என்மேல் இரக்கங்கொண்டு என்னுயிரை விழுங்கிவிட்டு என்னை மானமழியாமல் காப்பாற்றலாகாதா? பாவியான் உன்கண்

னுக்கும் வெகு இளக்கரமாய் விட்டேனே! ஆ ஈசா! ஒரு துயரம் மறைய ஒரு வழி ஏற்படுவதற்குள், ஒன்றன்பின் ஒன்றாய் துயரத்தி லேயே என்னைத் தூக்கி எறிந்து விட்டாயே. அத்துயரக்கடலில் உயி ரோடு நீந்தவறியாது உயிர்தத்தளித்துத் தவிப்பதைவிட அத்துயரக் கடலிலேயே என்னுயிரைத்தொலைக்க ஒருவழியாகிலும்இப்பேதைக்கு மனமிரங்கிக் காட்டலாகாதா? பாவியான் இவ்வித துயரங்களனுபவிக் கவா பிறந்தேன்! அந்தோ! எல்லாத்துன்பமும் போதாதென்று இந்தப் பாவி எவனோ வந்து தாறுமாறுமாய் உளருகிறான். ஆ! நான் என்செய் வேன்? எதற்கென்று அழுவேன்?" என்று தன் மனத்திற்குள், வருந் திப் பதறிப் பாகாயுருகித் தவிக்கும் தருணம், மறுபடி அந்த ஆசாமி அவளை உற்றுநோக்கியவாறு, "என்ன வைதேகி! ஏன் வாய்திறக்கா மல் மௌனமாய்நிற்கிறாய்? என்னை நீ இனி வேறு மனிதனாக எண்ண வேண்டாம்.உன் மனத்திற்கு உகந்தமணாளனென்று எண்ணுவாய்.கண் ணே!வைதேஹி! நான்உன்னைக்கண்டு எத்தனைநாளாய் உன்மேல் ஆசை யோடு உன் தரிசனத்திற்குத் தெருவில் ஏங்கி நின்று காத்திருந்தேன் தெரியுமா? உன் பேரானந்த அற்புத வெள்ளமாகிய அழகையும், உன் முக வசீகரத்தையும், உன் அழகிய மான்போன்ற பார்வையையும் கண்டு என் உடல், பொருள், ஆவியாகிய எல்லாவற்றையும் உனக்குப் பாதகாணிக்கையாய் அர்ப்பணம் செய்துவிட்டு உன்னுடைய சிநே கத்திற்குப் பாத்திரனாக வேண்டுமென்று கோராத தெய்வங்கள் பாக் கியில்லை. அவ்வளவு அரும்பாடு பட்டும் அம்ருத மாகிய நீ எனக்குக் கிடைக்காமல் இத்தனை நாளாய்த் தவறிக்கொண்டே வந் தாய். என் காதல் கிளியே! அந்த மொட்டைப்பயல் துபாஷ் சாரங்க பாணிக்கும் உன் பாட்டி கூனற்கிழவிக்கும் வெகு சிநேகமாகையாலும், அந்தச் சாரங்கபாணிக்கும் எனக்கும் மனஸ்தாபமாகையாலும், நான் உங்கள் பாட்டியிடத்தில் எத்தனையோ முறைகளில் பணத்தைக் கணக்கில்லாமல் சொட்டுகிறதாயும் உன்னை எனக்கே கல்யாணம் செய்துவிடு என்றும் நான் சொன்னதற்கு அவள், "என் தம்பி சாரங்க பாணி யாருக்குக்கொடுக்கிறானோ அவனிஷ்டம்.அவன்உத்தரவில்லாமல் நான் எதையும் செய்யமாட்டேன். மேலும் சாரங்கபாணி உனக்குக் கொடுக்கச் சம்மதித்தால் நீயே கட்டிக்கொள்" என்று கூறிவிட்டாள். சாரங்கபாணிக்கும் எனக்கும் ஜென்ம த்வேஷமாகையால், அவன்

மூலமாய் நீ எனக்குக் கிடைக்கமாட்டாய் என்று ஏங்கிப் பிறகு நான் ஒரு பயித்தியம் பிடித்தவன் போலாய்விட்டேன். உன்னழகை ஒரு முறை வீதியில் நின்றுவது காணலாம் என்று பயித்தியம் பிடித்தவன் போலவே வீதியில் நின்று காத்திருந்தாலும் உன்தரிசனம் என்னவோ எனக்குக் கிடைப்பது அருமையாயிருந்தது. நான் இருப்பது தேனும் பேட்டை. இன்று இரவு என் பங்களாவிற்குப் பக்கத்திலிருக்கும் ஒரு பங்களாவில் இப்போது 5-6 நாளாய் ஒரு ஜெமீந்தார் குடித்தனம் வந்திருக்கிறார். அவரைத்திடீரென்று ராத்ரி 10 மணிக்கு மேல் போலீஸ் காரர்கள் வந்து கைதுசெய்து கொண்டுபோனதை என் வேலைக்காரன் பார்த்துவந்து தெரிவித்தான். பிறகு நான் என்ன காரணத்தினால் அவ்வளவு பெரிய ஜெமீந்தாரைப் பிடிக்கவேண்டும் என்று வியப்போடு போய் விசாரித்ததில் இங்குள்ள ஒரு கான்ஸ்டேபில் மூலமாய்ச் சேதியையறிந்தேன். நீ ஜெமீந்தாருக்கு ஒரு வீணைப்பெட்டியை வீணையுடன் விற்றதாகவும், அதைத் திறந்துபார்த்தால் அதில் வீணை இல்லையாம். ஒரு கிழவியை அடித்துப்போட் டிருந்ததாம். அதற்காக உன்மேல் குற்றம் சாட்டி உன்னைக் கைது செய்யப்போவதாயும், ஜெமீந்தாரை வேறு ஒரு குற்றத்திற்காகப் பிடிக்க வந்த சமயம்கிழவி அங்குக் கிடந்ததனால்அறிந்த வீணைச்செய்தியும் ஒன்றுகூடி உன்னையும் பிடித்துவிட்டதாயும், ஜெமீந்தாரை வேறு விஷயமாய்ப் பிடித்துவிட்டதாயும் கூறினான்.

அதைக் கேட்ட நான் ஜெமீந்தார் எந்தக் குற்றத்திற்காகப் பிடிக்கப்பட்டார் என்ற செய்தியைக் கேட்கவில்லை. உன்னைப்பற்றி அவன் சொல்லியதைக் கேட்டதும் என் உயிரே போய்விட்டது போலாய்விட்டது. நான் உடனே ஒரு யோசனை செய்தேன். அது என்னவென்றால் இந்தத்தருணம் உன்னைக் காப்பாற்றி உன் இடரைத் தீர்க்கவேண்டும் என்பது. எந்தப்போலீஸ் இலாகாவிலும் அவர்கள் கேஸ் பிடித்த 24 மணி நேரத்திற்குப் பிறகு தான் மேல் கோர்ட்டுக்குத் தெரிவிப்பது வழக்கம். அதற்குள் சின்ன கேஸ்களாயும், ரகசிய சமாசாரங்களாயுமிருந்தால் இந்தப்போலீஸ் அதிகாரிக்கு வாய்க்கரிசி போட்டுவிட்டால் அதையப்படியே அமுக்கிவிடுவார்கள். அப்படி முடியாத விஷயமாயிருந்தால் தக்கபடி சாக்ஷி ஜோடித்துக் குற்றவாளி பக்கம் தீர்ப்புச் செய்துவிடுவார்கள். அதை நான் அறிவேனாகையாலும், இந்த

ஜெயில் தலைவரும், போலீஸ் இன்ஸ்பெக்டரும் எனக்கு விசுவாசமானவர்களாகையாலும், அவர்களைக்கொண்டு உன்னைக் காலைக்குள் எப்படியாவது சிறையைவிட்டுக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணங் கொண்டேன். உன்மேல் நான் வைத்திருந்த ஒரு கரையிலாக்காதல் என்னை அப்படிச் செய்யத் தூண்டிற்று. உடனே நான் ஒருபை பணத்தை மூட்டை கட்டிக்கொண்டு, நேரே என் மோட்டார் வண்டியைப் போட்டுக்கொண்டு, என் சிநேகிதரான ஜெயில் அதிகாரியிடம் பாதி மூட்டையை யவிழ்த்துவிட்டு, மிகுதியுள்ள பாதியை போலீஸ் இன்ஸ்பெக்டருக்குக் கொடுத்துவிட்டு, உன்னைப்பார்க்கும் பொருட்டு இந்த அர்த்த ராத்திரி வேளையில் அலகைபோல வந்தேன். என் கற்பகத்தருவே! காதல் களஞ்சியமே! உன்னை நான் இந்த உத்தரக்ஷணமே உன்மேல் யாதொரு குற்றமுமில்லாமல் செய்து தப்பவைக்கவும், எல்லாவற்றையும் அந்தத் தடிப்பயல் சாரங்கபாணி தலையிலேயே மூட்டை ஏற்றவும் நமக்கு சாக்ஷியிருக்கிறது. என்னவெனில் நீ வீணையைப் பெட்டியில் வைத்துக் கொடுத்தபோது உன்னோடுகூட நானும் என் வீட்டிலிருக்கும் இன்னும் வேறு சிலரும் பார்த்ததாக நான் சாக்ஷி சொல்லுகிறேன். அந்தச் சாரங்கபாணியே கிழவியைக் கொன்றுவிட்டால் உன்னை யடையலாம் என்று எண்ணினனென்றும், நீ அதற்குச் சம்மதிக்கவில்லையாதலால், அந்தப் பழியை உன்மேல் சுமத்திவிடலாம் என்ற கருத்தோடு இப்படிச் செய்திருக்கிறான் என்றும், உன்னை யடையும் பொருட்டே சிநேகம் செய்ததாகவும், அவனுக்கு வைதேகியைக்கொடுக்க கிழவிக்கு இஷ்டமில்லை என்றும், பெரிய தனவந்தனுக்கே கொடுக்கப் பிரியப்பட்டாளென்றும், உன்னைக் கிழவி தனக்குக் கொடுக்க மறுத்து விட்டபடியால் கிழவியின்மேல் அகங்காரங்கொண்டு அவளைக் கருவைத்துத் தருணம் பார்த்துக் கொன்றுவிட அவனே எத்தனித்தான் என்றும், நான் உங்களுடைய வீட்டிற்கு நெடுநாளைப் பழக்கமென்றும், அதனால் எல்லாம் எனக்குத் தெரியும் என்றும், நான் சரியாக சாக்ஷி ஜோடித்து இன்னுமுள்ள என் சிநேகிதர்களின் உதவியைக்கொண்டும் திட்டமாய்க் கூறிவிடலாம் என்று எல்லாவற்றையும் நான் முடிவு கட்டிக்கொண்டு, பணத்தையும் மூட்டை கட்டிக்கொண்டு வெகு துரிதமாய் உதயமாவதற்குள் வேலையை முடித்து

விடவேண்டும் என்று பரபரப்புடன், உன்மேலுள்ள அன்பினுல் அடித்துத் தள்ளப்பட்டு, இரவோடிரவாய் இங்கு ஓடிவந்தேன். என் மனத்தைக் கவர்ந்த மனோரஞ்சனியே! நீ தப்பிப்பிழைப்பது உன் வாய் மொழியில்தான் இருக்கிறது. என்னை இத்தனை நாளாய் வருத்திக்கொண்டிருந்தது போதும். இனி யப்படி வருத்தாமல் என் மனத்தைக் களிக்கச்செய்துவிடு. இந்தக்ஷணமே நீயும் நானும் இந்தச் சிறையைவிட்டு என்னுடைய பங்களாவிற்குப் போய்விடலாம். கண் மணி! ஏன் வாய் மூடிக்கொண்டிருக்கிறுய்? உன் முத்தான வாய் திறந்து "ஆகட்டும்" என்று ஒரு வார்த்தை சொல்லிவிடு. இதோ உன்னை வெளிகிளப்பும் வழியைத் தேடுகிறேன்." என்று பெரிய பிரசங்கம்போல அன்பாயும், கெஞ்சலாயும் கூறினுர்.

அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த வைதேகியின் மனத்தில் பெருத்த திகிலும், பயமும் கூடி வருத்த, கண்வழியாய் நீர் தாரை யாய்ப்பெருக,என்ன செய்வதென்பதை அறியாது ஸ்தம்பித்து நின்று, கூண்டிலடைபட்ட கிளிபோலத் தத்தளிக்கின்றுள்; தபிக்கின்றுள்;எங் தப்பக்கமும் அவள் வெளிக்கிளம்ப வழி என்பதே காணப்படவில்லை. அவள் உயிர் நிலையில் நிற்காமல் துடித்துப் பறக்கின்றது. அந்த நிலைமையில் அவள் அந்த அன்னிய புருஷனிடத்தில் எப்படிப் பேசுவாள்? அவனது மோகாவேசத்தையும் உரைக்கும் கதையையும் உணர்ந்தவுடன் அவள் "நான் எப்படி இந்தத் தடவை இவனிடமிருந்து என் கற்பைக் காப்பாற்றிக்கொண்டு தப்புவது?" என்ற எண்ணமே அவள்மனத்தில் போராடத்தொடங்கி, பெரிய அலைகள்போலக் கொந்தளித்துக்கொண்டே இருந்தது. அத்தருணம் அவள் வாய்திறவாமலிருந்தால் அந்த மூர்க்கன் அவளைப் பலவந்தமாகவே தொட்டு விடுவான்போல விருக்கிறது. என்னசெய்வாள் அந்தத் தர்மசங்கடத்திற்கு? அவனுக்கோ நிமிஷத்திற்கு நிமிஷம் மோகம்தலைக்கேற வேகம் அவளருகில் கிட்ட நெருங்கிவிட்டது. அதைக் கண்டதும் நமது மடமயிலாள் "ஆ! இனி நாம் பேசாமலிருந்தால் இவன் நாம் சம்மதித்து விட்டோம் என்றுஎண்ணிவிடுவான். இந்தச் சமயம் நாம் பேசியே தான் தீர வேண்டி யிருக்கிறது." என்று முடிவு செய்துகொண்டு, தலைகுனிந்தபடியே மெல்லப் பேசத்தொடங்கி "ஐயா! யார் விதியை வெல்ல யாராலாகும்? அவரவர் விதியை அவரவர்கள் அனுபவித்துத்தானே

தீரவேண்டும். என் தலையில் நான் குற்றம் செய்யாமலேயே சிறை வாசம் செய்யவேண்டும் என்று எழுதியிருந்தால் அதை நிவர்த்திக்க நீரில்லை, உம்மைப்பெற்ற பாட்டனில்லை, யாராலும்முடியாது. என் தலையில் எழுதிய பிரம்மதேவனாலும் இனியதை மாற்ற முடியாதென்றால், அதிகம் வீண்பேச்சு எதற்கு? என் தலை விதிப்படி நடக்கட்டும். என் பொருட்டாக நீர் பொய் சாக்ஷி சொல்லிப் பொய் கேஸுகள் ஜோடித்துப் பணத்தை வீணாய் நஷ்டம்செய்து திரிந்து சிரமப்பட்டுப் பெருத்த பாபமூட்டையைக் கட்டிச் சுமக்கும்படியாய் நான் ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன். என்னை வீணே நீர்இச்சிப்பதையும் விட்டுவிடும். ஏற்கெனவே நான் ஒருவரைமணந்தவளாகையால் இனி அந்த ஆபாசமான பேச்சை எடுக்கவேண்டாம். உம்முடைய தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டு, கண்விழித்துக்கொண்டு கஷ்டப்படவேண்டாம். நீர்ஒருதரம் சொன்னாலும் அதே பதில் தான். நீர் பன்னிப் பன்னி நூறு தரம் சொன்னாலும் அதே பதில்தான். நான் சிறையிலேயே என் உயிரைத் துறப்பேனேயன்றி, என் மானமழிந்து, கற்பு குலைந்து ஒரு போதும் நான் வாழமாட்டேன், வீணாய் நீர் சிரமப்படவேண்டாம். கடைசியில் இலவுகாத்த கிளிபோலத்தான் ஆகும். ஆகையால் சுலபமாய் இப்போதே கஷ்டமின்றிப்போய் விடும். என்னுடைய முடிவைத் தெரிவித்து விட்டேன். இனிஎன்னைப் பேசும்படி செய்யவேண்டாம். உமக்குப் புண்ணியமுண்டு'' என்று அழுத்தமாயும் திருத்தமாயும் கூறினாள். அதைக் கேட்ட அந்த மனிதன் அவளது உறுதியான எண்ணத்திற்கும், நெஞ்சழுத்தத்திற்கும், அவள்பேசிய ஒவ்வொரு பதமும் நிறுத்துவைத்த மாதிரியிருந்ததற்கும், அவள் தனக்கு ஏற்கெனவே விவாகமாய்விட்டதென்று பொய்யுரைத்ததற்கும், வியப்பே வடிவாய் நின்று, அவளது கோபமும் துக்கமும் வழிந்தமுகத்தைப் பார்த்தவண்ணம். "ஏ, காமசுந்தரீ! நீ இப்படித்தானா பதில் சொல்வது? நீ என்ன சொல்கிறாய் என்று நான் பார்த்தேனேயன்றி உன் அநுமதியைப் பெற்றுத்தான் நான் உன்னை படையவேண்டுமென்பதில்லை. ஆயினும் உன்னிஷ்டத்தையும் பார்ப்போம் என்றுகேட்டேன். அதற்குச்சரியான படி ஜவாப் சொல்லாமல் உன் அட்ட காசத்தை எல்லாம் காட்டுகின்றாயோ? இங்கேயோ உனக்கு என்னை விடவேறு யாருமில்லை. உன்னையப்படியே பலவந்தமாய்க் கட்டித் தூக்கிச் சென்றால் தான்

என்னை யார் கேட்பவர்கள்? நீயாக சம்மதித்து வராமையால் இதோ உன்னைத் தூக்கிக் கட்டியணைத்து, என்னுவலடங்க முத்தமிடு கிறேன் பார்'' என்று ஆவேசத்தோடு கூறிக்கொண்டே இருகைகளை யும் விரித்துக்கொண்டு, ஓரே பாய்ச்சலாய் வைதேஹியின்மீது பாயமுயன்ற சமயம், அதைக் கடைக்கண்ணால் அறிந்து கொண் டிருந்த நமது அருங்குணமணியாகிய வைதேகி, துடி துடித்து, நடு நடுங்கித்தான் எப்படியாவது அவன் கையில் அகப்படாமல் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணிச் சிட்டுக்குருவிபோலப் பறந்து, ஓரே துள்ளலாய்த் துள்ளிக்குதித்து, அங்கு நடுவில் போடப்பட்டிருந்த பலகையைத் தாண்டிக்கொண்டு, அப்பால் சென்று வலையிலகப்பட்ட மான்போல மருளமருள விழித்து நின்று, எங்காகிலும் தனக்குத்தப்பி யோடத் துளியிடமாவது கிடைக்குமா வென்று சுற்று முற்றும் பார்த் தாள். அப்போது அந்த அறைச்சுவரின் மேல்பாகத்தில் ஒரு ஜன் னல் இருந்ததைக் கண்டாள். அதை எப்படி, தான் எட்டுவது அது உயர விருக்கின்றதே என்று யோசித்துக் கொண்டே நிற்கையில் அந்த ஆசாமி மறுபடியும் அந்தப் பலகையைத் தாண்டி இப்புறம் வரமுயன்றான். அத்தருணம் வைதேகி ''ஐயோ! நான் என்ன செய் வேன்! இந்தப் பாவி என்னை உயிரோடுவிட மாட்டான் போலிருக் கிறதே! என் பிராணன் போனாலும் என்மானம் நின்றால் போதுமே! ஏ ஜகதீசா! ஆபத்பாந்தவா! அனுதாரக்ஷகா! என்னுடைய இடர்தீர்க்க இத்தருணம் நீங்களெல்லோரும் இறந்து விட்டீர்களோ. ஆ! என் செய்வேன்! பாவி அருகில் வருகிறானே'' என்று எண்ணிய வளாய் தன்னுடைய கற்பின் பலத்தினால் தூண்டப்பட்டவளாய், சரே லென்று ஒரு இமைப்பொழுதில் அந்த அறைக்கதவின் கோல்லைப் பிடித்துக் கொண்டு கதவின் மேலேறி, அதன் வழியாக நான்கு விரற் கடை அகலம் சுவரின் மேல்பாகத்தில் தென்பட்ட மேடுபோல விருந்த கைப்பிடியைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அதில் தொத் திய வாறே இரண்டடி தூரத்திலிருந்த ஜன்னலண்டை போய், அந்த ஜன்னலின்மேல் ஏறிக்கதவைத்திறந்ததும், அது கம்பிகளில்லாத வெறும் கண்ணாடிக்கதவா யிருக்கக்கண்டு மட்டற்ற மகிழ்ச்சி யடை ந்து, அந்த ஜன்னலின் இருகதவுகளையும் திறந்து விட்டுக் கீழ் நோக்கி அங்கு நிற்கும் ஆசாமியைக்கண்டு ''ஐயா! இங்கிருந்து கீழேவிழுந்து

என் பிராணனை விடுவேனேயன்றி உம்முடைய பேச்சைக்கேட்டு என் மான மழிய மாட்டேன்." என்று கூறிக்கொண்டே 2 ஆள் உயர மிருந்த ஜன்னலிலிருந்து சரேலென்று விழுந்து விட்டாள்.

கீழே நிற்கும் ஆசாமி, வைதேகியைப் பிடிக்க ஓடிவருந்தருணம் அவர் அங்குப்போடப்பட்டிருந்த பலகையைத் தாண்டப் போகையில் அது அவர் காலில் தடுக்கி தபீரென்று விழுந்து விட்டாராகையால் அவர் விழுந்த வுடன் இது தான் தருணமென்று வைதேகி கதவின் மேல் ஏறிக் கீழே விழுந்த சமயமும், அவர் கீழே யிருந்து எழுந்து நின்ற தருணமும் ஒன்ருய்விட்டன. அவர் எழுந்து வைதேகி எங்கே என்று பார்க்குந் தருணம், அவள் கூறிய வார்த்தையையும், உடனே தன் உயிருக்குத் துணிந்து அவள் விழுந்துவிட்டதையும் உணர்ந்த ஆசாமி அவளுடைய ஸாகஸத்தையும், கற்பின் திறத்தையும், தன்னுல் உயிர் துறக்கக் கீழே விழுந்துவிட்டதையும் கண்டு அப்படியே திக்பிரமை கொண்டு இன்னது செய்வ தென்பதையறியாது,ஐயோ! இவள் உயிரைத் துறந்துவிட்டாளே! இனி என்ன செய்வேன்! என்று கலங்கி நடைச்சவம் போல மருள மருள விழித்துக் கொண்டு நின்று விட்டான்.

---


## ஜெகன் மோகினி.

இது ஒரு நாவல் அடங்கிய மாதாந்த சஞ்சிகை. இச்சஞ்சிகையின் வாயிலாகவே கனம் வடுவூர். துரைசாமி ஐயங்கார் அவர்கள் இயற்றிய காளிங்கராயன் கோட்டை ரகஸியம், விலாசவதி என்கிற அதி அற்புதமான நாவல்கள் வெளியாயின. இச்சஞ்சிகையின் மூன்ருவது ஆண்டாகிய 1925 வருஷத்திலிருந்து ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகி என்பவரால் இயற்றிய வைதேஹி என்னும் அதிவினேதமான துப்பறியும் நாவல் ஸ்ரீமான் வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் அவர்களால் பார்வையிடப்பட்டு வெளிவருகின்றது. இந்த வைதேகியின் முதல் பாகம் முற்றுப்பெற்றது. இரண்டாம் பாகம் இச்சஞ்சிகையின் வாயிலாகவே வரும். இச்சஞ்சிகையின் வருஷச்சந்தா உள்நாடு ரூ. 1 8 0. வெளிநாடு ரூ. 2 0 0. இச்சஞ்சிகை வேண்டுவோர் அடியில் கண்ட விலாசத்திற்கெழுதி வி. பி. யிலோ அல்லது மணியார்டர் மூலமாகவோ தருவித்துக்கொள்ளலாம். மாதிரிப்பிரதியின் விலை அணு 3.

ஜெகன்மோகினி ஆபீஸ்,
26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.


182824

இனும் ! இனும் !!

## காதலின் வெற்றி !

யௌவனக் காதலர்கள் அவசியம் படிக்க வேண்டிய ஓர் இன்ப நூல். காதலின் மகிமையை நன்கு விவரித்துள்ளது. விலாசம் தெரியப்படுத்தினுல் ஒன்று இனும் !

## இனிய துப்பறியும் நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| சரோஜனி | 2 | 0 | அமரநாதன் | 1 | 4 |
| இளங்கோவன் | 1 | 12 | அமிர்தகுமாரி | 1 | 4 |
| ஆதிலட்சுமி | 1 | 12 | இந்திரஜித்தன் | 1 | 4 |
| அயாஷா | 1 | 12 | ரங்கநாயகி | 1 | 4 |
| கனகமணி | 2 | 12 | எமகாதகன் | 0 | 8 |
| பத்மாட்சி | 2 | 0 | தடிராமன் | 0 | 6 |
| கனகாங்கி | 2 | 0 | பச்சைமோதிரம் | 1 | 0 |
| ஞானசெல்வாம்பாள் | 8 | 0 | காதல் மையல் | 1 | 8 |
| மதனும்பாள் | 3 | 0 | கணவன்கடமை | 0 | 4 |
| மாணிக்கவல்லி | 1 | 0 | லோகநாயகி | 1 | 0 |
| திருக்கழுக்குன்றத்துக் கொலை | 1 | 8 | இந்திராபாய் | 2 | 8 |
| | | | பச்சையம்மாள் | 1 | 0 |

எம். எஸ். ராமுலு அண்டு, கம்பெனி.

புஸ்தக வியாபாரிகள் (ஜ)

ராயபுரம், மதறாஸ்.

---

குறைந்த விலை ! அபூர்வ விஷயம். சுத்தப் பதிப்பு !!

## English Self Instructor. Rs. 1-8-0.

## இங்கிலீஷ் உபாத்தியாயர்

அல்லது

### இங்கிலீஷ் கற்கும் வழி.

நாவல் உலகத்தில் பிரசித்தி பெற்ற

வடுவூர் - கே. துரைசாமி ஐயங்கார் அவர்களின்

முகவுரையுடன் கூடியது.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்களின் உச்சரிப்பு நன்ருக விளங்கும்படி வெளியிடப் பட்டிருக்கின்றது. உபாத்தியாயர் இல்லாமலே சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். பெண்பாலர்களும் சுலபமாய்க் கற்றுக்கொள்ளலாம்.

தி. மதராஸ் நாவல் டிபோ,

3, இருசப்பன் சந்து, மின்ட் பில்டிங்ஸ் மதராஸ்.

# எங்களிடம் கிடைக்கும் புஸ்தகங்கள்.

## வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் B. A. யால்

## எழுதப்பட்டவை.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விலாஸவதி | (2) | 3 | 0 | 0 | மதன கல்யாணி | (3) | 4 | 8 | 0 |
| மேனகா | (2) | 3 | 0 | 0 | பூர்ணசந்திரோதயம் | (4) | 7 | 8 | 0 |
| கும்பகோணம் வக்கீல் | (2) | 3 | 0 | 0 | சௌந்தர கோகிலம் | | 1 | 8 | 0 |
| பாலாமணி | | 2 | 8 | 0 | கனகாம்புஜம் | (2) | 2 | 12 | 0 |
| வஸந்த மல்லிகா | | 1 | 8 | 0 | மாணிக்க வாசகர் | | 0 | 8 | 0 |
| வித்தியாசாகரர் | | 1 | 4 | 0 | திலோத்தமா | | 0 | 12 | 0 |

---

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியர்

சே. கிருஷ்ணமாசாரியர் பதிப்புப்புத்தகங்கள்

உரையுடன் கூடியன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **கம்பராமாயணம்.** | | | | **கம்பர்.** | | | |
| கிஷ்கிந்தா காண்டம் | 4 | 8 | 0 | சடகோபரந்தாதி | 0 | 10 | 0 |
| சுந்தரகாண்டம் | 5 | 0 | 0 | சரசுவதியந்தாதி | 0 | 3 | 0 |
| **வில்லிபுத்தூரார் பாரதம்.** | | | | **பிள்ளை பெருமாளையங்கார்** | | | |
| இராயசூயச் சருக்கம் | 1 | 4 | 0 | அஷ்டப்ரபந்தம் | 3 | 8 | 0 |
| சூதுபோர்ச் சருக்கம் | 1 | 12 | 0 | நன்னூற் காண்டிகை | 1 | 8 | 0 |
| உத்யோக பர்வம் | 2 | 0 | 0 | ஸ்ரீபட்டர் வைபவம் | 0 | 8 | 0 |

வத்ஸா அண்டு கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

எமது ரேஜிஸ்டர்ட் லேடி டிரேட் மார்க் போட்டிருக்கும்

புஸ்தகம் பார்த்து வாங்குங்கள் ! !

# ஆங்கில ஆசான்

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கோள்ளலம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றக்கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் நன்ருய்த் திருத்தப்பட்டு 5-ம் பதிப்பாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. உடனே எழுதுங்கள்.

விலை ரூ. 2

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் உபாத்தியாய ரில்லாமல் தெரிந்து கோள்ளலாம். ஒரு இங்கிலீஷ் சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, கருமாதி நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் அர்த்தமும் வெகு சுளுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன.' மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் கட்டாயம தேவை.

பினங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் தான் புஸ்தகம் அனுப்பப்படும். கவனிக்கவும். சேட்லாக் இனம்.

**தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை தெருவு,**
மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

---

# தேவை.

குறைந்த விலை! உயர்ந்த மருந்துகள் ! !

எல்லா விடங்களிலும் கமிஷனுக்கும சம்பளத்திற்கும் ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு 1 அணு ஸ்டாம்புடன் எழுதுங்கள்.

எல்லாவிதமான இங்கிலீஷ், தமிழ், யூனனி மருந்துகளும், உங்களுக்கு தேவையான எல்லாவித சாமான்களும் விலை சரசமாய் நம்மிடம் கிடைக்கும்.

மற்ற வியாபாரிகளை விட நாங்கள் நயமான வஸ்துக்களை குறைவான விலைக்கு விற்பனை செய்கிறோம்.

வியாதிவஸ்தர்கள் தங்கள் வியாதிகளை தெரியப்படுத்தினால் தக்க அவுடதங்கள் குறைந்த விலைக்கு அனுப்பித் தரக்கூடும்.

விபரத்திற்கு 1 அணு ஸ்டாம்பு அல்லது ரிப்ளைகார்டுகளுடன் எழுதவும். ஒரு முறை பரீக்ஷியுங்கள், உண்மை விளங்கும்.

**டாக்டர் கே. எஸ். பீ. மணியம் அவர்கள்**
இங்கிலீஷ் மேடிகல் டிஸ்பேன்ஸரி,
நரசை, நிர்தனமங்கலம் போஸ்டு.
(தஞ்சாவூர் ஜில்லா.)

# அமிர்தாஞ்சனம்

அமிர்தா ஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரு. 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

உடனே முந்துங்கள்.

மோஹினி தைலம்.
பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

**அமிர்தாஞ்சன் டிப்போ,**

**7. தம்புச்செட்டி வீதி, சென்னை.**


சென்னை. நோபில் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.